விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 315 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 12 செவ்வாய்க்கிழமை (29.10.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஊழல், மோசடிகளை தடுக்க நடவடிக்கை

### ஜனாதிபதி அநுர குமார



(கொழும்பு)

ஊழல், மோசடிகளைத் தடுக்க முறையான கொள்கை ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (15ஆம் பக்கம் பார்க்க)

## மீண்டும் பயணத்தை ஆரம்பித்த யாழ் தேவி

(யாழ்ப்பாணம்)

வடக்கு தொடருந்து மார்க்கத்தின் யாழ்ப் பாணம் - கொழும்பு இடையிலான தொட ருந்து சேவைகள் நேற்று முதல் மீண்டும் 15

## தேர்தல் தொடர்பில் யாழில் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலகத்தில் தேர்தல் தொடர் பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நவம்பர் மாதம் 14ஆம் திகதி நடை பெறவுள்ள பாராளுமன்றத் தேர்தல்கள் 15

## தேர்தல் வாக்குறுதிகளை ஜனாதிபதி மீறியுள்ளார் - சஜித்

(கொழும்பு)

தற்போதைய ஜனாதிபதி தமது தேர்தல் வாக்குறுதி களை மீறியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

கொலன்னாவப் பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் 15

## டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் டெங்கு நோயாளர் களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக 02

## வேதன அதிகரிப்புக்கு ரணில் நிதி ஒதுக்கவில்லை - பிரதமர்

(கொழும்பு)

அரச பணியாளர்களுக்கு வேதனத்தை அதிகரிப்பதற்கு முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிதி எதனையும் ஒதுக்கியிருக்கவில்லை என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

கொஸ்கம பகுதி யில் இடம்பெற்ற 15










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## சிவகுரு மோதிலால் கந்தையா
(சிரேஷ்ட கணக்காளர் – மாநகரசபை, வவுனியா)



தோற்றம் 11.09.1972 மறைவு 27.10.2024

நவாலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் (தற்காலிக வசிப்பிடம் - வவுனியா) கொண்ட சிவகுரு மோதிலால் கந்தையா அவர்கள் 27.10.2024 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை செல்லமுத்துவின் அன்புப் பேரனும் சிவகுரு - இராசபூபதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்ற பே.யுவானி, றெயினா மகேஸ்வரி அவர்களின் அன்பு மருமகனும் மிரியம் வொலன்ரினா (அபிவிருத்தி உத்தியோகத்தர், வெங்கல செட்டிக்குளம் - பிரதேச செயலகம்) அவர்களின் பாசமிகு கணவரும் கஷோனா(வவுனியா/ இறம்பைக்குளம் மகளீர் மகா வித்தியாலயம்), அஸ்ரேனா(வவுனியா/ சைவப்பிரகாசம் மகளீர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகஜீவன்(ஆசிரியர் - கொழும்பு சர்வதேச பாடசாலை), கேதாரகௌரி (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம் - நல்லூர்), வித்தியாகௌரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதிவர்ணன் (ஆசிரியர் - யாழ். பரியோவான் கல்லூரி), சுஜீத்தா(பணிப்பாளர், ERD மத்திய வங்கி), மோகனராஜ்(அபிவிருத்தி உத்தியோகத்தர் - சங்கானை, பிரதேச செயலகம்), மிரியம் கொன் செப்ரா (ஆசிரியர், யா/கோட்டைக்காடு அ.மி.த.க பாடசாலை), கிறிஸ்ரி வொலன்ரைன் (உரிமையாளர், டல்லா புடவையகம்), டெலஸ் கொன்ஸ்ரன்ரைன் (வியாபாரி, சுன்னாகம்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் இருதயநாதன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), மேரி கலிஸ்ரா (அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ். மாநகர சபை), அதிசயமலர் (வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம் - மடு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 29.10.2024 செவ்வாய்க்கிழமை காலை 08.00 மணியளவில் சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாயில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று அன்னாரின் பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 6266 337 (495) தகவல் : குடும்பத்தினர்

## டெங்கு...

தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, இவ்வருடத்தின் இது வரையான காலப்பகுதிக்குள் 41,866 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதிகளவான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலிருந்து பதிவாகியுள்ளனர்.

இந்நிலையில் கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் இருந்து அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 20 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 03 . 06 . 1954



மறைவு 28 . 10 . 2024

எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு ஆசிரியை
திருமதி கிறிஸ்ரில்டா அன்ரன் ராஜ்குமார் அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் கொர்னலியூஸ் யுவன்ரியஸ் (எபிநேசர்)**

அவர்களின் மறைவு குறித்து எமது பாடசாலைச் சமூகம் ஆழ்ந்த துயரம் அடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் : ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
யா/நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
யாழ்ப்பாணம்

(2525)


# பாராளுமன்ற தேர்தல் - 2024

## வன்னி தேர்தல் மாவட்டம்

"அன்றும் இன்றும் என்றும் தடம் மாறாத
தமிழ்த் தேசிய பயணத்தில்"

## வல்லிபுரம் கமலேஸ்வரன்

(முன்னாள் பிரதி அவைத் தலைவர், வடக்கு மாகாண சபை)
இணைப்பொருளாளர் - இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

**மரியாதைக்குரிய அரச பணியாளர்களே !**

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த உறுப்பினரும் இணைப் பொருளாளருமான முல்லைத்தீவின் வெற்றி வேட்ப்பாளர் வல்லிபுரம் கமலேஸ்வரன் அவர்களை உங்கள் பொன்னான வாக்குகளால் வெற்றிபெற செய்யுங்கள்.





## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

(C-042)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரதமர் ஹரிணி வடக்கிற்கு விஜயம்

(கொழும்பு)

பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பரப்புரை கூட்டத்தில் பங்கேற்பதற்காக பிரதமர் ஹரிணி அமரசூரிய வட பகுதிக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

பிரதமர் ஹரிணி அமரசூரிய எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி பிரதமர் முல்லைத்தீவு மாவட்டத்திற்கும் 10 ஆம் திகதி யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களுக்கு வருகை தரவுள்ளார். (6-8)


## பாராளுமன்றப் பொதுத் தேர்தல் 2024

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி | யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்

யாழ். கிளிநொச்சி மாவட்டங்களின் பெருமதிப்புக்குரிய அரச சேவையாளர்களே.!



ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியற்களம் திறக்கப்பட்ட 2010 களில், அரச சேவையிலிருந்து அரசியற்களம் புகுந்த எனது 15 ஆண்டுகால மக்கள் பணி குறித்து தாங்கள் நன்கறிவீர்கள்.

அந்தப் பணிகளது தொடர்ச்சியின் தேவையுணர்ந்தவர்களாக, உங்களின் குரலாய் என்றும் ஒலிக்கத் தயாராயுள்ள எனக்கு மீளவும் ஆணை தாருங்கள் என்று உரிமையுடன் வேண்டிநிற்கிறேன்.

தமிழ்த்தேசியத்தின் அடையாளமான வீட்டிற்கு எதிரேயும், எனது இலக்கமாகிய ஏழிற்கு மேலேயும் நீங்கள் இடும் புள்ளடி, **இனியொரு விதி செய்யும்.**

**சிவஞானம் சிறீதரன்**
**M.Ed, B.A, PGDE (Mt), PGDEM, Sp. Tr(Ag)**
நாடாளுமன்ற மேனாள் உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,

X 7

(சி-036)

தாயகம் | தேசியம் | தன்னாட்சி

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்ப்பாணம் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்



தேசத்தின் மீட்புக்காய்
தேசியத் தலைவரின் வழிநின்ற
போராளிகளுக்கான அரசியல்
அங்கீகாரம்...

உங்கள் வாக்கு போராளி
**சி.வேந்தன்** இற்கு

ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி

X 9

(018) தாயகம்... தேசியம்... சுயநிர்ணயம்...

அனைவருக்கும் இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

## பாராளுமன்றத் தேர்தல் - 2024





வெல்வோம்
வெல்வோம்
சைவத்
தமிழ்த் தேசியம்
நாளை நமதே,
ஆறும் நமதே

**பாலசிங்கம் ஜயமாறன்**

சுயேட்சைக்குழு - 12

X 4

## கொள்கை

01. இலங்கை அரசியலமைப்பில் சைவ சமயத்துக்கு முன்னுரிமை விதி சேர்க்க.
02. மதமாற்றத் தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.
03. பசு வதைத் தடைச் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.
04. இலங்கைத் தீவு முழுவதும் ஒரே குடியியல், குற்றவியல் சட்டங்களை அரசியலமைப்பு விதியாக்குக.
05. 2016 உச்ச நீதிமன்றத் தீர்ப்பு ஏற்ற 2008 இன் புதிய வழிபாட்டிடங்கள் அமைத்தல் தொடர்பான விதியைச் சட்டமாக நாடாளுமன்றத்தில் இயற்றுக.
06. அரசு சார்பற்ற நிறுவனங்கள் வெளிநாடுகளில் இருந்து பெறும் நிதி வரவு விவரம் மூன்று மாதத்துக்கு ஒருமுறை அரச நடு வங்கிக்குப் பட்டியலாகத் தரும் சட்டம் நாடாளுமன்றத்தில் இயற்றுக.

(008)

உங்கள் வெற்றிச் சின்னம் ஆமை

## பாராளுமன்றத் தேர்தல் - 2024

யாழ்.கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்

3



**தவச்செல்வம் சிற்பரன்**

(கட்டடக் கலைஞர், பழைய மாணவன் -
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)

தமிழ் மக்கள் கூட்டணி X 3


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சமபோஷா கிண்ணம் சம்பியனான சென் பற்றிக்ஸ்



யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சமபோஷா கிண்ணத்திற்கான ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான சமபோஷா கிண்ணத்திற்கான கால்பந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இறுதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். இந்துக் கல்லூரி அணி மோதியது. சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வீரர் ஆருஷன் தனது அணிக்கான முதலாவது கோலைப் பதிவு செய்ய முதல் பாதியாட்டத்தில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலை வகித்தனர்.

இடைவேளைக்கு பின்னரான ஆட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி அணி வீரர்கள் தமக்கு கிடைத்த இரு வாய்ப்புக்களை நழுவவிட்டனர். ஆனால் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கு ஆட்டம் நிறைவடைவதற்கு முன்னர் சில நிமிடங்கள் இருக்கும் போது மூலை உதை கிடைத்தது.

இதனைச் சரியாக பயன்படுத்திய அவ்வணி வீரர் சங்கவன் ஒரு கோலைப் பதிவு செய்ய ஆட்ட நேர முடிவில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். இத்தொடரின் ஆட்ட நாயகனாக சென் பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ஆருஷன், சிறந்த கோல் காப்பாளராக சென் பற்றிக்ஸ் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த நிதர்ஷன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (6-8-90)

# பாகிஸ்தான் அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து கேரி கிரிஸ்டன் விலகல்

பாகிஸ்தான் ஒயிட்பால் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக இருந்து வந்த கேரி கிரிஸ்டன் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக இந்த முடிவை எடுத்துள்ளதாக தெரிகிறது.

கிரிஸ்டன் டேவிட் ரெய்ட்-ஐ ஹை பெர்மார்மன்ஸ் கோச்சாக நியமிக்க வலியுறுத்தியுள்ளார். ஆனால் பாகிஸ்தான் கிரிக்கெட் அவரது கோரிக்கையை நிராகரித்துள்ளது. டேவிட் ரெய்ட்இற்குப் பதிலாக மற்றொரு ஆலோசனை பாகிஸ்தான் கிரிக்கெட் போர்டு வழங்கியுள்ளது. அதை கேரி கிர்ஸ்டன் ஏற்க மறுத்து விட்டார். இதனால்தால் பதவியை ராஜினாமா செய்துள்ளார்.



டெஸ்ட் அணியின் பயிற்சியாளராக உள்ள ஜேசன் கில்லெஸ்பி அல்லது தேசிய அணியின் தேர்வாளராக உள்ள அக்யூப் ஜாவித் ஆகியோரில் ஒருவர் தேர்வாக வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியா தொடர் தொடங்க இருக்கும் நிலையில் முகமது ரிஸ்வானை கப்டனாக பாகிஸ்தான் அணி நியமித்துள்ளது.

கடந்த மே மாதம்தான் தலைமை பயிற்சியாளராக நியமிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3249

### பர்மிகன்




### ராதிகா




### விஜிந்தன்




### சாகிரா




### விதுரன்




### மிதுளன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கும் கட்சிகளை ஒருங்கிணைப்பேன்

## கிளி.மண்ணில் சிறீதரன் உறுதி

(கிளிநொச்சி)

ஈழத்தமிழர்களின் இறைமை மீட்புக்கான அரசியற்போரில் ஏகோபித்த தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பயணிப்பதற்கான எத்தனங்களை மேற்கொள்வேன் என தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற வேட்பாளர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை கிளிநொச்சி - செல்வாநகர் வட்டாரத்தில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்களை சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது, தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு உள்ளும் புறமுமாய் ஏற்பட்டுள்ள பிளவுகள், எமது மக்களிடையே பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

அதனால் எமது மக்கள் அரசியல் வெறுமைக்குள் தள்ளப்பட்டுள்ளார்கள். இந்த நிலை மாறவேண்டுமானால் தமிழ்த்தேசியத் தளத்தில் இயங்கும் கட்சிகளும் அதன் தலைமைகளும் ஓரணியில் இணைய வேண்டும். இது காலத்தின் தேவை.

உட்கட்சி முரண்நிலைகளைத் தாண்டி இது சாத்தியமா? என்ற கேள்வி இருந்தாலும் இனத்தின் இருப்புக்காக அதனைச் சாத்தியமாக்க வேண்டிய காலக்கடமை எமக்கு தரப்பட்டுள்ளதை உணர்ந்து, கொள்கைரீதியான உடன்பாடுகளின் அடிப்படையில் முறைமைப் படுத்தப்பட்ட இணக்க நிலையை உருவாக்கவும், அதன்வழி ஈழத்தமிழர்களின் அரசியல்வெளியில் காத்திரமான தலைமைத்துவத்தை உருவாக்கவும் தொடர்ந்தும் உழைப்பேன் என்றார். (ந-7)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புச் சலுகைகள் ரத்து

## ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகள், சலுகைகள் நிச்சயமாக ரத்து செய்யப்படும் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பத்தேகமவில் தேர்தல் பிரசார கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பதும் கவனித்துக் கொள்வதும் மக்களின் வேலையில்லை.

சுற்றுநிருபங்கள், பாராளுமன்ற சட்டங்கள், அரசமைப்பு ஏற்பாடுகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு விசேட சலுகைகள், சிறப்புரிமைகள் வழங்கப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

அந்த சுற்றுநிருபங்களில் சட்டங்களில் மாற்றங்களை கொண்டுவருவது குறித்து கவனம் செலுத்துகின்றோம் என அவர் தெரிவித்துள்ளார். (6-8)

# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 23. பாங்ஷால் வீதி, 362ஆம் ஆதன இலக்கத்தைக் கொண்ட ஆதனம் கபிரியேலின் உரிமையாளர் என்ற பெயரில் யாழ் மாநகரசபை ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

மேற்குறித்த ஆதனத்தினை பிலிப்பு கைம்பெண் செல்லம்மா 13.09.2000ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிக நன்னியன் தம்பி முத்தன் முகதாவில் 2415ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் பிலிப்பு கிறி சோஸ்ரமும் பெண் மங்களமும் என்பவரிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

மேற்குறித்த உறுதியில் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்ற 605ஆம் இலக்க தத்துவ வழக்கில் கண்டிருப்பதில் கணபதி கந்தர் வழியால் தனக்கு வந்தடைந்த உரிமையும் ஆட்சியும் என செல்லம்மாவினால் குறிப்பிடப்பட்டுள்ளது.

பின்னர் குறித்த ஆதனத்தை பிலிப் கிறிஸ்ரோற்றமும் பெண் மங்களமும் 2000.10.21 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு Y.சத்தியநாதன் முகதாவில் 376 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி என்பவரிற்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி. சுண்டிக்குளி கோவிற்பற்று. கரையூர் இறை, குடியிருப்பு நிலப்பரப்பு இரண்டும் குளி இரண்டும் வீடும் மலசலகூடமும் செய்பயிர் வான்பயிர்களும். இதில் கிழக்குப்பக்கமாக நிலப்பரப்பு ஒன்றும் குளி ஒன்றும் ( நி.ப 1 குளி 1) இதற்குள் அடங்கிய வீட்டின் பகுதியும் மற்றையவைகளும். இதற்கு எல்லைகள்

கிழக்கு: இதன் மிகுதி ஆதனம்

வடக்கு: வீதி

மேற்கு: பொன்னையா பெண் சின்னம்மாவுக்குரிய ஆதனம்

தெற்கு: பூதர் தம்பிப்பிள்ளைக்குரிய ஆதனமும்

இவ்வெல்லைப்படி அடங்கலும் இன்னும் இதற்குச் சேர்ந்தவைகளும்

தற்போது சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி இவ்வாதனத்தை தனது பெயரினை எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் ஒரு பகுதிக்கு/ முழுவதற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது சிவக்கொழுந்து தங்கராசா பெண் சுகந்தி எனும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பிரச்சினைகளுக்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆணையாளர்,மாநகரசபை, யாழ்ப்பாணம்.




ஊஞ்சல் சின்னம்

X 4

சுயேச்சைக் குழு - 2

கல்விக்காருண்யன் E.S.P. நாகரத்தினம் ஐயா அவர்கள் கல்வி, விளையாட்டு, கலை கலாச்சாரம் என மக்களுக்கு ஆற்றிய பணி அளப்பரியது.

E.S.P நாகரத்தினம்

கமலரூபன்

சட்டத்தரணி, இளம் தொழில் முயற்சியாளர்

LL.B (Hons), BA (Economics) (University of Colombo)

தந்தை வழியில் தனையனும், மண்ணையும் மக்களையும் நேசிப்பதுடன் அரசியல் மூலம் மக்கள் பணிக்காக, ஆளுமையுள்ள இளைஞனாக, தலைமைத்துவம், முயற்சியாண்மை, கல்வி, விளையாட்டு, கலை கலாச்சாரம் ! என ஐந்து அம்ச அனுபவத்துடன் களத்தில் கமல்.

**களத்தில் கமல்,** தமிழர் பரப்பில் மக்களுக்கு தேவையான ஆளுமையுள்ள புதியவர் இவர்... ஆளுமைமிக்கவர் ஞும், இளைஞர்களும் அரசியலை வெறுப்புடன் பார்க்கும் சமயத்தில் அதில் இருந்து மாறுபட்ட கோணத்தில் நம்பிக்கையுடன் கமலின் அரசியல் பயணம்...

**அரசியல் மூலம் மக்கள் பணி,** தமிழர் பரப்பான சுயத்திலும், புலத்திலும் பலமான அரசியல் கட்டமைப்பை உருவாக்குவதே எனது நோக்கமாகும். கடந்த 15 வருடங்களாக இணக்க அரசியல் என்ற பெயரில் சரணாகதி அரசியலையும், எதிர்ப்பு அரசியல் என்ற பெயரில் விளைத்திறனற்ற செயற்பாட்டையும், சுயநலத்திற்காக பிளவுபட்ட கட்சிகளையும் எதிர்த்து நேர்மையான விளைத்திறனான அரசியலுக்கு...

**யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி தேர்தல் மாவட்டம்,** தமிழர் பரப்பான வடக்கு, கிழக்கினை மையப்படுத்திய தமிழ்த்தேசியமான சுயத்திலும் தமிழ் மக்கள் செறிந்து வாழும் புலங்களான இலங்கையின் வடக்கு, கிழக்கு தவிர்ந்த பகுதிகளையும் (உ-ம் = கொழும்பு) உலகெங்கும் பரந்து வாழும் நம் தமிழரை மையப்படுத்த, இங்கிருந்து...

**2024 பாராளுமன்ற தேர்தல்,** சமூகத்தில் இளம் தொழில் முயற்சியாளராக 2016 ஆம் ஆண்டு வணிகத் தொழிலிலும், 2018 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்டத்துறையிலும் கால் பதித்து சுயமாக தொழிற்பட்டு வந்தார். அந்த வேளையில் மக்களுக்கு 2020ஆம் ஆண்டு முதலே அரசியல் தலைமைத்துவம் தேவையுள்ளதை அறிந்திருந்தும், தன்னை பொருளாதார ரீதியாகவும், சமூக மட்டத்தில் அனுபவ ரீதியாகவும், சமூகத்தை நன்கு அறியப்பட வேண்டிய தேவைப்பாடு கருதி பொறுமை காத்து வந்தார். பின்னர் 2023 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் களமிறங்கி அறிமுகத்தை ஏற்படுத்தியும் 2025ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் இலக்கையே நோக்கத்துடன் பயணித்த வேளையில் 2024 எமக்கான களமாகிறது...

**மாற்றத்திற்கான நம்பிக்கை,** 1948 ஆம் ஆண்டு சுதந்திரத்திற்கு பின்பு தொடர்ந்து வலதுசாரி கொள்கை கொண்ட ஆட்சி காணப்பட்டு தற்போது இடதுசாரி பின்னணியுடைய இலங்கை அரசியல் தளத்தில் இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தைக்கு புதியதோர் மாற்று அரசியலும், மாற்று அரசியல் இயக்கத்தை உருவாக்கக்கூடிய சிந்தனையாளர்களினதும், செயற்பாட்டாளர்களினதும் தேவைப்பாடு உள்ளது. காலங்காலமாக காலாவதியான சுயநல அரசியலை மட்டும் மேற்கொண்டமையால் தமிழ் மக்கள் அரசியலில் வெறுப்படைந்துள்ள நிலையில் சுயத்தை இழக்காது தமிழர்களது அபிலாசைகளுடன் பொருளாதார வளமேம்பாட்டை நகர்த்த.....

**சுயேட்சைக்குழு - 2,** வீழ்ந்தால் நான் மட்டும் வீழ்கிறேன் எழுந்தால் பலமான தமிழர் பரப்பு புது விடியலை நோக்கி பயணிக்கட்டும் என தன் காலில் தான் நிற்றலே தமிழர்களுக்கான பேரம் பேசும் ஆற்றலை அதிகரிக்கும். ஓர் சீரமைக்கப்பட்ட தலைமைத்துவ கட்டமைப்பு அற்ற பல தேசிய கட்சிகள் மற்றும் தமிழ்த்தேசிய கட்சிகளின் குறைபாடே எனது அரசியல் அறவழிப் பிரவேசத்திற்கான உந்துதல்...

(சி-032)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

**புதிய அனுமதிகள்**

1. கல்வியியல் முதுமாணி (MED)-2024/25 (அணி VIII) வவுனியா பிராந்திய நிலையம்
2. பட்டப்பின் கல்வித் தலைமை கற்கை நெறி (PGD in Education)-2024/26 (அணி VIII) வவுனியா பிராந்திய நிலையம் (பகுதி நேரம்)

மேற்படி சுயநிதிக் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் மற்றும் மேலதிக விபரங்களை உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வலைத்தளத்தில் (WWW.grad.jfn.ac.lk) பார்வையிடலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி 29.11.2024

மேலதிக தொடர்புகளுக்கு 021 222 3608

பதிவாளர்

(சி-1466)


# சேவை நலன் பாராட்டு

திருமதி.டோறா பான்சி கல்கி

ஆரம்பக் கல்வி(SLTS-I)



சேவை விபரம்

- யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலை (2000.01.03-2001.07.03)
- கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசலை (2001.07.04-2003.06.30)
- யா/புதுமடம் றோ.க.த.க பாடசாலை (2003.07.01-2011.05.23)
- யா/ஏழாலை வடக்கு அ.மி.த.க பாடசாலை (2011.05.24-2018.04.22)
- யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம் (2018.04.23-2024.09.22)

Best Wishes

ஆசிரியராக அளப்பரிய சேவையாற்றி 2024.09.22 அன்று ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வு பெற்ற எமது வித்தியாலய ஆசிரியை திருமதி. டோறா பான்சி கல்கி அவர்களை வாழ்த்துவதுடன் அவரது ஓய்வுக் காலத்தில் சீரும் சிறப்புடன் வாழ இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்
பாடசாலைச்சமூகம்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.வித்தியாலயம்.

(2560)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். ஸ்ரீ நாக விகாரையின் வருடாந்த வஸ்திர தானம்



(யாழ்ப்பாணம்)

யாழ். ஸ்ரீ நாக விகாரையின் வருடாந்த வஸ்திர தானமும் கட்டின பிங்கல வைபவமும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

யாழ். ஆரியகுளம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்திலிருந்து விசேட பூஜை வழிபாடுகளுடன் பெரஹராவானது ஆரம்பமாகி யாழ்ப்பாணம் நாக விகாரையை வந்தடைந்தது.

அதன்பின்னர் விசேட வழிபாடுகளுடன் வஸ்திர தானமும், கட்டின பிங்கல வைபவமும் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத் தூதுவர் சாய் முரளி, வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் இ. இளங்கோவன், நாகவிகாரை விகாராதிபதி சிறி விமலதேரர், யாழ். பல் கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை, மறவன் புலவு க.சச்சிதானந்தம், யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சி.பி. விக்கிரமசிங்க, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் திலக்தன பால உட்படப் பலரும் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (6-8)

## ஆதரவாளர்கள் இருவரிடையே முறுகல்
### ஒருவர் மருத்துவமனையில்

(முறிகண்டி)

தமிழரசுக் கட்சி ஆதரவாளர்களிடையே முரண்பாடு ஏற்பட்டதில் ஒருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி அக்கராயன் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கந்தபுரம்- மணியங்குளம் வீதியில் குறித்த சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த நபர் அக்கராயன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக அக்கராயன் குளம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (6-8-100)

# தேர்தல்களம்




## தமிழர் விரோத அரசியலை முழு பலத்துடன் எதிர்கொள்வோம்

### லாந்தர் சின்னத்தில் சுயேட்சையாக போட்டியிடும் கேதீஸ்வரன்



ஜே.வி.பியின் தமிழர் விரோத அரசியலை முழு பலத்துடன் தமிழ்த் தேசியம் எதிர்கொள்ளும் என யாழ். தேர்தல் மாவட்டத்தில் சுயேட்சைக்குழு 21 இன் லாந்தர் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய பண்பாட்டு பேரவை தலைவர் பா.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

சிங்கள பேரினவாதத்தின் அடக்குமுறைகளையும், அரசியலையும் எதிர்கொண்ட எம் மக்களுக்கு ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வாவின் வன்மத்தையும், அநுரவின் போலி இடது சாரி அரசியலையும் எதிர் கொள்வதில் எந்தச் சிரமமும் இல்லை. எம் மக்கள் எல்லாவற்றையும் சந்தித்தவர்கள் அந்த வகையில் இந்த ஜே.வி.பியின் ஆட்சியினை, என்றுமே வீழ்ந்து விடாத தமிழ் தேசியம் முழுமூச்சுடன் நிமிர்ந்து நின்று எதிர்கொள்ளும் எனத் தெரிவித்தார். (6-8)

## யா/ அச்சுவேலி மத்திய கல்லூரி இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த
### மண்டப திறப்பு விழா இன்று



1892 ஆம்ஆண்டுஆரம்பிக்கப்பட்ட நூற்றாண்டுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட எம் கல்லூரியானது 1AB பாடசாலையாகும். இங்கிருந்து வருடா வருடம் மருத்துவத் துறைக்கும் பொறியியல் துறைக்கும் ஏனைய துறைகளுக்கும் பல மாணவர்கள் செல்கின்றனர். 500 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்று வருவதுடன் பல்வேறு இணைபாடவிதான செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கி தேசிய ரீதியிலும் பல பரிசில்களையும் பெற்றுள்ளனர்.

இவ்வாறான சிறப்புகளைக் கொண்ட இக் கல்லூரிக்கு பிரதான மண்டபம் ஒன்று இல்லாமை மாபெரும் குறையாகவே இருந்து வந்துள்ளது. இதனால் மாணவர்கள் கற்றலில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்கொண்டனர். இந் நேரத்தில் எம் கல்லூரியின் பழைய மாணவராகிய ஆறுமுகம் புண்ணியமூர்த்தியின் பார்வை எம்கல்லூரியின் பக்கம் திரும்பியது. எம் கல்லூரியின் பெருங்குறையறிந்து அதனை நிறைவேற்ற முன்வந்தார்.

கடந்த 2023.07.12 ஆம் திகதியன்று இம் மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டப்பெற்று வேலைகள் ஆரம்பமாகி இன்று 29.10.2024 பணிகள் யாவும் நிறைவுற்று மண்டபம் சிறப்புற நிமிர்ந்தோங்கி நிற்கின்றது. எம் கல்லூரியின் பழைய மாணவனும் வைத்திய கலாநிதியுமாகிய ஆறுமுகம் புண்ணியமூர்த்தி (அவுஸ்திரேலியா) எமது கல்லூரியின் முன்னைய நாள் ஆசிரியரும் பிரதி அதிபரும் பழையமாணவரும் தனது தந்தையுமாகிய அமரர் இளையதம்பி ஆறுமுகம் ஞாபகார்த்த மண்டபம் ஒன்றினை தனது சொந்த நிதியில் அமைத்து இன்றைய தினம் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கவுள்ளார்.

இந் நன்நாளில் அவரது பெரும் பணியை கௌரவித்து வாழ்த்துவதோடு கல்லூரிச் சமூகம் சார்பாக நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்,**
**யா/அச்சுவேலி மத்திய கல்லூரி அச்சுவேலி**

## கசிப்புடன் கைது



(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் 10 லீற்றர் கசிப்புடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ் . மாவட்ட பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ததுடன் அவரது உடைமையில்இருந்து 10 லீற்றர் கசிப்பினையும் மீட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரும் மீட்கப்பட்ட கசிப்பினையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (6-8-33)

## 12 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - பருத்தித்துறையை அண்மித்த கடற்பகுதியில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான 12 இந்திய மீனவர்களும் விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் நேற்று முன்தினம் பருத்தித்துறை பதில் நீதவான் முன்னிலையில் பிரசன்னப்படுத்தப்பட்டனர். இதன் போது அவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதவான் உத்தரவிட்டுள்ளார். (6-8)

## அமெரிக்க பிரஜைகளுக்கு எவ்வித தடையுமில்லை



(கொழும்பு)

இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அமெரிக்கப் பிரஜைகளுக்கு எந்த வகையிலும் தடைவிதிக்கப்படவில்லை என இலங்கையிலுள்ள அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போது அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் இதனைக் குறிப்பிட்டார்.

அறுகம்பைப் பகுதியில் பாதுகாப்பு அச்சுறுத்தல் நிலவுவதாகக் கிடைத்த தகவலையடுத்து, மறு அறிவித்தல் வரை குறித்த பகுதிக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு அமெரிக்கப் பிரஜைகளுக்கான பயண ஆலோசனை கடந்த வாரம் திருத்தப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் கடந்த பல வருடங்களாக இருந்ததைப் போல முழு இலங்கைக்கு மான பயண ஆலோசனையைத் தொடர்ந் தும் 2 ஆவது மட்டத்திலேயே அமெரிக்கா பேணி வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார். (6-8)

## 637 வாகனங்கள் பறிமுதல்

(கொழும்பு)

இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்ட பல்வேறு மாதிரிகள் கொண்ட 637 வாகனங்கள், பாவனைக்கு தகுதியற்றதாக சிதைவடைந்துள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் தெரிவித்துள்ளது.

அந்த வாகனங்களில் 36 வாகனங்கள் சுமார் ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பறிமுதல் செய்யப்பட்டன.

சுங்கத் திணைக்களம் தொடர்பாக கடந்த ஆண்டிற்கான கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தே.ம.ச கட்சியின் வாக்கு வங்கியில் வீழ்ச்சி

**மத்துமபண்டார**

(கொழும்பு)

எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தியினால் ஒரு பிரதேச சபையின் அதிகாரத்தைக் கூட கைப்பற்ற முடியாத நிலை ஏற்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், நடை பெற்று முடிந்த எல்பிட்டிய பிரதேச சபைத் தேர்தலின் முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியின் வாக்கு வங்கியில் வீழ்ச்சி ஏற்பட்டுவருவதை அவதானிக்க முடிந்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இடம்பெறும் எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் ஆளும் கட்சியே அதிகூடிய வாக்குகளைப் பெற்று வெற்றி பெறுவதே வழமையாகும்.

எவ்வாறாயினும் இந்த முறை முடிவுகளின் அடிப்படையில் தேசிய மக்கள் சக்தி 17,000 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தாலும், ஏனைய கட்சிகளுக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கை 19,000 ஆகும். எனவே, தேசிய மக் கள் சக்தி மீதான மக்களின் வரவேற்பு குறைவடைந்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (6-8)




## நினைவு கூருகின்றோம்

எமது கல்லூரியின்
ஆசிரியர்
திரு.சிறீரமணன் அவர்களின்
அன்பு தந்தையார்

அமரர். பொன்னுத்துரை
இரவீந்திரன்



அவர்களின் பிரிவினால்
துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த இரங்கல்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடைய
இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யாழ்/கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-1467)

**லங்கா மஹறால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு
விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.

(354)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும்
கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி
செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956156719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை
எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா,
மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
**077 839 3974**

## நினைவு கூருகின்றோம்

பிறப்பு
30.11.1959

இறப்பு
26.10.2024

அமரர்.
செல்லன் உதயகுமார்

(முன்னாள் ஆசிரியர் மற்றும் பிரதி அதிபர்,
யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்).



அவர்களின் பிரிவினால் துயருறும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
இரங்கல்களை தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

(சி-2523)

ஓய்வுநிலை அதிபர் திரு.வி.மாணிக்கம், முன்னைநாள் ஆசிரிய நண்பர்கள்
யா/கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம்.


# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யா/ நடேஸ்வரக் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் பா. பாலகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது. (6-8)

# நிலவும் சீரற்ற காலநிலை 8 மாவட்டங்கள் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம்



(கொழும்பு)

வடக்கு, வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் மணித்தியாலத்திற்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று அதிகரித்து வீசக்கூடுமென வளி மண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் சந்தர்ப்பங்களில் ஏற்படும் ஆபத்துக்களைத் தடுப்பதற்குத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளது.

இதனிடையே நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக யாழ்ப்பாணம், திருகோணமலை, மன்னார், பதுளை, கேகாலை, புத்தளம், காலி மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய 8 மாவட்டங்கள் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன.

குறித்த மாவட்டங்களில் 3,511 குடும்பங்களைச் சேர்ந்த 12,860 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. அத்துடன், சீரற்ற வானிலை காரணமாக நாடளாவிய ரீதியில் 77 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. இந்த நிலையில், நாடளாவிய ரீதியில் 89 குடும்பங்களைச் சேர்ந்த 302 பேர் தற்காலிக முகாம் களில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (6-8)

# இராசிபலன்

29.10.2024
ஐப்பசி 12, செவ்வாய்க்கிழமை
துவாதசி பிற்பகல் 12.19 மணிவரை
உத்தரம் முன்னிரவு 08.38மணிவரை

சுபநேரம் 10.33-12.03 மணிவரை
இராகுகாலம்3.03-4.33 மணிவரை
பிரதோச விரதம்,
அமிர்த சித்தம்

சந்திராஷ்டமம்: திருவோணம்
அவிட்டம்

**வளவன்**




சுவாரஸ்யம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், செய் தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மற்றவர்களின் மனநிலையை அறிந்து செயற்படுவீர்கள்.




குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு, வருமானம் திருப்தி தரும்.




சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறலாம், நடப்பது எல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள்.




அரை குறையாக இருந்த பணிகளை ஆர்வத்தோடு செய்து முடிப்பீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும், வர வேண்டிய பணவரவு வந்து சேரலாம்.




பிள்ளைகளின் தேவை அறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக கற்பக மூர்த்தியை வழிபட வேண்டிய நாள், செய்தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும்.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள்,




குடும்பத்தில் குதூகலம் கூடும், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பொது வாழ்வில் புகழ் கூடும்.




கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள், குடும்பப் பொறுப்புகள் கூடும் .




நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




விரும்பிய உணவுப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் முயற்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவார், உடல் நலனில் அக்கறை கூடும்.




உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவார், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம்.




சொந்த பந்தங்கள் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**உறுதியாக இல்லாவிட்டால் நீ நல்லவனாக இருக்க முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## பேருந்து-லொறி விபத்து 24 பேர் உயிரிழப்பு

### மெக்சிக்கோவில்–சம்பவம்



(மெக்சிக்கோ)
மெக்சிகோவில் பயணிகள் பேருந்தொன்று வேகக்கட்டுப்பாட்டை இழந்து லொறியொன்றுடன் மோதியதில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

மெக்சிக்கோவின் நயாரிட்- சிகுவாகுவா நெடுஞ்சாலையில் குறித்த விபத்து சம்பவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த விபத்தில் காயமடைந்த பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், உயிரிழந்தவர்களின் சடலங்களை மீட்கும் பணியில் அந்நாட்டு மீட்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (6-8)

## 'டிராமி' புயலின் எதிரொலி உயிரிழப்பு 126 ஆக அதிகரிப்பு

### பிலிப்பைன்ஸில் துயரம்



(மணிலா)
பிலிப்பைன்ஸில், "டிராமி" புயல் தாக்கியதன் எதிரொலியாக கனமழை, வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 126 ஆக அதிகரித்துள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடான பிலிப்பைன்ஸின் வடமேற்கு பகுதியான படாங்காஸ் மாகாணத்தை, டிராமி புயல் சமீபத்தில் தாக்கியது.

இதன் காரணமாக தொடர்ந்து கனமழை பெய்ததுடன், பல்வேறு பகுதிகளில் வெள்ளப் பெருக்கும் ஏற்பட்டது. குடியிருப்புப் பகுதிகளை வெள்ளம் சூழ்ந்ததால், சாலையோரங்களில் நிறுத்தப்பட்ட வாகனங்கள் அடித்துச் செல்லப் பட்டன.

கனமழை, வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு உள்ளிட்ட பாதிப்புகளில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 126 ஆக அதிகரித்துள்ளது. 40இற்கும் மேற்பட்டோர் மாயமாகி உள்ளனர். இதனால், பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது.

கனமழையை தொடர்ந்து ஆங்காங்கே நிலச் சரிவும் ஏற்பட்டது. இதில் சிக்கி, பலர் சகதிக்கு அடியில் புதைந்ததாகக் கூறப்படுகிறது. அவர்களை மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (6-8)

# கொதி நிலையில்

# பதிலடிக்கு தயா

(டெஹ்ரான்)

**எங்கள் நாட்டு மக்களின் மீது நடத்தப்படு தலுக்கும் பதிலடி கொடுக்கும் உரிமை எ உண்டு. இந்த நடவடிக்கைகளுக்கு கொடுக்கப்படும் என்றும் ஈரான் தெரிவித்**



லைபானான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி ஹிஸ்புல்லாவின் முக்கிய தலைவர்களை கொன்றது. இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான், இஸ்ரேல் மீது கடந்த 1ஆம் திகதி 180 இற்கும் மேற்பட்ட சூப்பர் சோனிக் ஏவுகணைகளை

# இருநாள் போர் நிறுத் எகிப்து ஜனாதிபதி அழை

(கெய்ரோ)
காசாவில் இரண்டு நாட்கள் போர்நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என எகிப்து ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். கெய்ரோவில் நேற்று முன்தினம் நடந்த மாநாட்டில் அவர் இந்த அறைகூவலை முன்வைத்தார்.

இதன்போது கருத்துத் தெரிவிக்கையில் "காசாவில் இரண்டு நாட்கள் போர் நிறுத்தத்தை மேற்கொள்ள முன்மொழிகிறேன். இந்த இரண்டு நாட்களில் இஸ்ரேலிய சிறைகளில் உள்ள பாலஸ்தீன கைதிகளுக்குப் பதிலாக காசாவில் உள்ள இஸ்ரேலிய பிணைக் கைதிகள் 4 பேரை விடுவிக்கலாம்.

அதைத் தொடர்ந்து அடுத்த 10




நாட்களுக்கு மேலு வார்த்தைகளை மு என்றார்.

ஆனால் இது கு அப்தல் ஃபதா அல் இஸ்ரேல் அரசி ஹமாஸ் தரப்பிடமே இல்லையா? எ தெளிவுபடுத்தவில்ல அவரின் அழைப்பு வாய்ந்ததாக இருக்

வடக்கு காசாவி மரணங்களும் கா களும் அதிகரித்து வருத்தம் தெரிவித் இரண்டு நாட்கள் தத்துக்கு அழைப் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கு ராகும் ஈரான்!

படும் எந்த ஒரு தாக்கு
என்பது எங்களுக்கு
சரியான பதிலடி
வித்துள்ளது.





வீசியது.

இந்தப் பின்னணியில், ஈரான் தலைநகர் டெஹ்ரானைக் குறிவைத்து இஸ்ரேல் வான்வழித் தாக்குதலை தற்போது நடத்தியுள்ளது.

டெஹ்ரானின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதிகளில் உள்ள இராணுவ நிலைகளைக் குறி வைத்து இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈரான் உறுதி செய்துள்ளது.

ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதலை தற்காப்பு நடவடிக்கை என்று குறிப்பிட்டுள்ள அமெரிக்கா, வன்முறையின் சுழற்சியை உடைப்பதற்காக இஸ்ரேல் மீதான தாக்குதலை ஈரான் நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அமெரிக்க பாதுகாப்பு கவுன்சிலின் செய்தித் தொடர்பாளர் சீன் சாவெட் கூறுகையில், "இஸ்ரேல் மீதான தாக்குதலை நிறுத்துமாறு ஈரானை நாங்கள் வலியுறுத்துகிறோம். இதன மூலம் இந்த வன் முறையின் சுழற்சி மேலும் தொடராமல் முடிவுக்கு வரும்.

இஸ்ரேலின் அதிக மக்கள்தொகை கொண்ட நகரத்தின் மீது ஈரான் நடத்திய தாக்குதலுக்கு எதிராக தற்காப்புக்காக இஸ்ரேல் பதிலடி தாக்குதல் நடத்துகிறது.

மேலும், மக்கள் வசிக்கும் இடங்களைத் தவிர்த்து, இராணுவ இலக்குகளையே இஸ்ரேல் குறிவைக்கிறது. இந்தத் தாக்குதல்களில் அமெரிக்கா பங்கேற்கவில்லை. தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்துவதும், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதியை ஏற்படுத்துவதுமே எங்களின் நோக்கம்" என்று தெரிவித்துள்ளார். (நி-6-8)

# பூமியை கடந்து செல்லும் 3 பெரிய விண்கற்கள்

## நாசா தகவல்



(வோஷிங்டன்)

பூமியை 3 பெரிய விண்கற்கள் கடந்து செல்ல உள்ளதாக அமெரிக்க விண்வெளி கழகமான நாசா தெரிவித்துள்ளது.

இதுகுறித்து விஞ்ஞானிகள் கூறியதாவது:-பூமியை 3 விண்கற்கள் மிக நெருக்கமாக கடந்து செல்ல இருக்கிறது என்பதை நாசா கண்டு பிடித்திருக்கிறது.

அதன்படி முதல் விண்கல் பூமியை கடந்து செல்கிறது. 2024 டிபி2 என்று பெயிரிடப்பட்ட இந்த விண்கல் 110 அடி விட்டம் இருக்கும். 7.31 லட்சம் கி.மீ தொலைவில் இது பூமியை கடந்து செல்கிறது.

இதன் பாதை இப்போது வரை சீராகத்தான் இருக்கிறது. ஒருவேளை கடைசி நேரத்தில் ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டு இதன் பாதையில் மாற்றம் ஏற்பட்டால் பூமிக்கு பாதிப்பு ஏற்படலாம்.

2 ஆவது விண்கல் 2007 யூடி3. பூமியிலிருந்து 42 லட்சம் கி.மீ தொலைவில் இது கடந்து செல்ல இருப்பதால் பெரிய அளவுக்கு பாதிப்பு ஏதும் ஏற்படாது. ஆனால் 3ஆவது விண்கல்தான் அச்சத்தை ஏற்படுத்துகிறது.

2020 டபிள்யூ.ஜி என அழைக்கப்டும் இந்த விண்கல் 500 அடி விட்டம் கொண்டது. பூமியிலிருந்து சுமார் 30 லட்சம் கி.மீ தொலைவில் மணிக்கு 33, 947 கி.மீ வேகத்தில் இது செல்கிறது. இதன் பாதையில் மாற்றம் ஏற்பட்டு பூமியை மோதினால், அது விழுந்த இடத்தில் 2 கி.மீ ஆழத்திற்கு 4 கி.மீ அகலத்திற்கு பெரும் பள்ளம் உருவாகும்.

மேலும் 10 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்படும். விண்கல் விழுந்த இடத்திலிருந்து 500 முதல் 1000 கி.மீ சுற்றளவுக்கு எந்த கட்டடமும் இருக்காது. எல்லாம் தரை மட்டமாகி விடும். தவிர, எரிமலை வெடிப்பு, சுனாமி ஏற்படும்.

ஆனால் இது எதுவும் தற்போது நடக்காது என்று நம்பிக்கை உள்ளது. ஏனென்றால் இந்த விண்கற்கள் செல்லும் பாதையில் குறுக்கே எதுவும் இல்லை. இதனால் பூமி பக்கம் திரும்ப வாய்ப்பு இல்லை என அவர்கள் தெரிவித்தனர். (நி-6-8)

# ந்தம்! ழைப்பு

மேலும் சமரசப் பேச்சு
ளை முன்னெடுக்கலாம்."

இது குறித்து ஜனாதிபதி
ா அல் சிஸி முறைப்படி
அரசிடமோ அல்லது
பிடமோ பேசிவிட்டாரா?
? என்பது குறித்து
தவில்லை. இருப்பினும்
ழைப்பு முக்கியத்துவம்
இருக்கிறது.

ாசாவில் நாளுக்கு நாள்
ும் காயங்களும் அழிவு
கரித்துவருவதாக அவர்
தரிவித்த சூழலில் தான்
ாட்கள் போர் நிறுத்
ழைப்பு விடுத்துள்ளமை
கது. (6-8)

# இலக்கினை வெற்றிகரமாக முடித்துவிட்டோம்- நெதன்யாகு பெருமிதம்

(ஜெருசலேம்)

ஈரான் மீதான தாக்குதல் அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக அடைந்து விட்டது என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்தார்.



இது குறித்து, இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில் கூறியதாவது: ஈரான் முழுவதும் இஸ்ரேலின் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன் போது ஈரானின் இராணுவத் தளங்கள், இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதற்கு ஏவுகணைகள் தயாரிக்கப்பட்ட இடங்கள் கடுமையாக சேதப்படுத்தப்பட்டன. மேலும் ஈரான் மீதான இஸ்ரேலின் தாக்குதல் துல்லியமாகவும், சக்திவாய்ந்ததாகவும் இருந்தது. ஈரான்மீதான தாக்குதல் அனைத்து இலக்குகளையும் வெற்றிகரமாக அடைந்து விட்டது. இவ்வாறு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கூறினார். (6-8)

# பெரும்பான்மையை இழந்தது லிபரல் கட்சி

(டோக்கியோ)

ஜப்பானின் ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சி தலைமையிலான கூட்டணி, அந் நாட்டு பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்துள்ளது.

ஒரு தசாப்தத் திற்கும் மேலான கட்சியின் மோசமான முடிவு இது வாகும்.

லிபரல் டெமாக்ரடிக் கட்சி மற்றும் அதன் கூட்டணி பங்காளிக் கட்சியின் ஆட்சியும் பாராளுமன்றத்தில் 215 இடங்களை மாத்திரம் பெற்றன.

இதனால், தனித்து ஆட்சியமைக்கத் தேவையான 233 ஆசனங்களை லிபரல் டெமாக்ரடிக் கட்சி பெறத் தவறிவிட்டது.

இதில், அவரது கட்சி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்தமையால், இப்போது இஷிபாவின் அரசியல் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் எதிர்காலம் மக்களால் தீர்மானிக்கப்படும்

## பிரதமர் ஹரிணி

(கொழும்பு)

மக்களின் எதிர்பார்ப்புகளுடன் இணைந்த தேசத்தைக் கட்டியெழுப்பும் பயணம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புவக்பிட்டியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு கருத்துரைக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலம் எதிர்வரும் நவம்பர் மாதம் 14 ஆம் திகதி மக்களால் தீர்மானிக்கப்படும்.

இந்நிலையில் நிறைவேற்று அதிகாரத்திலும் அரசியல் கலாசாரத்திலும் தேவையான மாற்றங்களை முறையாக நடைமுறைப்படுத்த அரசாங்கம் உறுதியாகச் செயற்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தை சுத்தப்படுத்தி ஜனநாயக சக்தியாக மாற்றுவதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட முதலாவது நடவடிக்கை எனப் பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார். (6-8)

# மதுபோதையில் ஆட்டோ பந்தயம்

## 9 சாரதிகள் கைது

(கொழும்பு)

கொழும்பு - நீர்கொழும்பு பிரதான வீதியில் போக்குவரத்து விதிகளை மீறி பந்தயத்தில் ஈடுபட்ட முச்சக்கர வண்டி சாரதிகளை வத்தளை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வத்தளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை ஒன்பது முச்சக்கர வண்டிகள் மற்றும் அதன் சாரதிகள் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெல்லம்பிட்டிய, தெமட்டகொடை, மோதரை, கெரவலப்பிட்டிய மற்றும் மாபோல பகுதிகளைச் சேர்ந்த 18 - 22 வயதுடையவர்களே கைது செய்யப்பட்டவர்கள் ஆவர்.

கைது செய்யப்பட்ட முச்சக்கர வண்டி சாரதிகள் ராகம பொது வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்தப்பட்ட போது அவர்கள் மது அருந்தியிருந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபர்களை வெலிசர நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (6-8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 450 | 400 | 500 | 400 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 320 | 350 | 350 | 400 |
| தக்காளி | 300 | 350 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 240 | 200 |
| கோவா | 250 | 250 | 250 | 300 |
| கரட் | 200 | 200 | 250 | 250 |
| பூசணி | 100 | 80 | 280 | 120 |
| புடோல் | 200 | 180 | 120 | 250 |
| வாழைக்காய் | 180 | 120 | 150 | 250 |
| சின்ன வெங்காயம் | 300 | 280 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 280 | 250 | 250 | 220 |
| பாகற்காய் | 450 | 500 | 450 | 600 |
| வெண்டக்காய் | 150 | 200 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 140 | 160 | 200 |
| பயற்றங்காய் | 200 | 250 | 180 | 300 |
| லீக்ஸ் | 320 | 300 | 250 | 120 |
| பீற்றூட் | 150 | 120 | 180 | 200 |
| கறிமிளகாய் | 650 | 600 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 400 | 200 | 150 | 400 |
| போஞ்சி | 350 | 400 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | 400 | 350 |
| கீரை - 1 பிடி | 130 | 100 | 120 | 150 |
| தேசிக்காய் | 350 | 250 | 400 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 150 | 120-180 |
| இராசவள்ளி | -- | 800 | 650 | 1200 |
| வெங்காயப்பூ | 350 | -- | 400 | 480 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 120 | 80 |
| வல்லாரை | 60 | 30 | 80 | 60 |
| ஈரப்பலா | -- | -- | 60 | 200 |

# இன்று ஒரு தகவல் 253



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# மனமும் குரங்கும்!

ஒரு தடவை பெர்னாட்ஷோவைப் பார்த்துக் கேட்டார்கள். உலகம் ஏன் உங்களை சிந்தனையாளர் என்று பாராட்டியது என்று.

அதற்கு அவர் சொன்னார். ஒரு வருடத்திலே இரண்டு அல்லது மூன்று தடவைக்கு மேலே யாரும் சிந்திப்பது கிடையாது. நான் வாரத்திற்கு ஒரு தடவை, இரண்டு தடவை சிந்திக்கின்றேன். அது தான் உலகம் என்னை சிந்தனையாளர் என்று பாராட்டுகின்றது என்றார்.

இதிலிருந்து என்ன தெரிகின்றது? மனிதர்கள் யாருமே அதிகமாக சிந்திப்பது இல்லை என்று தெரிகின்றது.மனது சுத்தமாக இருக்க வேண்டும். அப்போது தான் சிந்தனை தெளிவாக இருக்கும். மனது எந்தளவிற்கு சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா? மார்க்கஸ் அரேலியஸ் என்கின்ற அறிஞர் அதற்கு ஒரு அளவுகோல் கொடுத்திருக்கின்றார்.

திடீர் என்று உங்கள் முன்னால் ஒருவர் வந்து நின்று இப்போது நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள் அப்படியே சொல்லுங்கள் என்று கேட்டால். உடனே தயங்காமல் உள்ளதை உள்ளபடியே இதைத் தான் இப்போது நான் நினைத்துக் கொண்டிருக்கின்றேன் என்று சுலபமாக சொல்லக் கூடிய அளவிற்கு மனது இருக்க வேண்டுமாம். அது தான் சுத்தமான மனது என்கின்றார் அவர்.

அப்படி சொல்லக்கூடிய நிலைமையிலேயா நாம் எல்லோரும் இப்போது இருக்கின்றோம். வெளிப்படையாக பேசுங்கள் சார் என்று கேட்டார். அது எப்படி சார்? மனதிலே நினைப்பதை எல்லாம் வெளியிலே காட்டிக்கொள்ள முடியுதா? என்று தானே கேட்கின்றோம் பின்பு எங்கே மனது சுத்தமாகின்றது.

எங்களிலே பல பேர் மனதை ஒரு கட்டுப்பாட்டிலே வைக்க வேண்டும் என்று தான் நினைக்கின்றோம். ஆனால் அது முடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. சும்மாவா சொன்னார்கள். மனது ஒரு குரங்கு மாதிரி என்று. அது சரி மனதிற்கும் குரங்கிற்கும் என்ன சம்பந்தம்.

இரண்டும் அடிக்கடி தாவிக்கொண்டிருக்கும். இது தான் நமக்கு தெரிந்த ஒற்றுமை. எனக்கு தெரிந்த நண்பர் ஒருவர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார். மனது, குரங்கு இரண்டையும் எப்போதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லை என்றால் நமக்குத் தான் கஷ்டம் என்றார். எப்படி என்றேன். அதற்கு அவர் ஒரு கதை சொன்னார்.

அதாவது ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய அரண்மனையிலே ஒரு குரங்குக் குட்டியை வளர்த்தார். ஒரு சுவர் ஓரமாக அது மிகவும் சாதுவாக உட்கார்ந்திருக்குமாம். அப்படி இருந்தாலும் கூட அந்த ராஜா தினமும் ஒரு குச்சியாலே அதற்கு இரண்டு அடி கொடுப்பார்.

அந்த அடியை வாங்கிக் கொண்டு அங்கே கிடைக்கின்ற ஆகாரத்தையும் சாப்பிட்டுக்கொண்டு அது மிகவும் சாதுவாக காலம் தள்ளிக் கொண்டிருந்தது. அந்த ராஜாவிற்கு புதிதாக ஒரு மந்திரி வந்து சேர்ந்தார். தினமும் ராஜா கூடவே இருப்பார், போவார், வருவார். ராஜா அந்த குரங்குக் குட்டியை அடிப்பதை மந்திரி பார்த்தார்.

அவருக்கு மனது மிகவும் சங்கடமாக இருந்தது. அரசே என்ன இது நியாயம். வாயில்லா ஜீவன். அதுமட்டுமல்ல அது மிகவும் சாதுவாக ஒரு மூலையில் உட்காந்திருக்கிறது. அதைப் போய் தினமும் அடிக்கின்றீர்களே என்றார்.

ராஜா பார்த்தார். சரி அமைச்சரே உங்கள் வார்த்தைக்கு மரியாதை கொடுக்கிறேன் இன்றிலிருந்து இந்தக் குரங்கை அடிக்கிறதை விட்டுவிடுகின்றேன். இதோ குச்சியை கீழே போட்டுவிடுகின்றேன் என்றார். போட்டுவிட்டார்.

அதன் பின்பு தினமும் மாலை ராஜாவும் மந்திரியும் அந்தப் பக்கமாக வருவார்கள், போவார்கள் ராஜா அடிக்கவில்லை என்றதும் குரங்கு கொஞ்சம் அசைய ஆரம்பித்தது. அடுத்த நாள் ஓடி விளையாட ஆரம்பித்தது. பின்பு ராஜாவிடம் ஓடிவந்து கொஞ்ச ஆரம்பித்து. அடுத்த நாள் அவர் இடுப்பிலே ஏறி உட்கார்ந்தது.

அடுத்த நாள் என்ன செய்தது தெரியுமா? ராஜா தோளிலே ஏறி உட்கார்ந்து அந்த குச்சியாலே ராஜா காதிலே குத்த ஆரம்பித்தது. மந்திரி பார்த்தார். என்ன இது ராஜா என்கின்ற மரியாதை இல்லாமல் என்று சொல்லி அந்தக் குச்சியை பிடுங்கி குரங்கை அடிக்க ஆரம்பித்தார்.

இப்போது ராஜா இந்த மந்திரியைப் பார்த்தார். இதே வேலையைத் தானே நான் ஆரம்பித்திலே செய்து கொண்டிருந்தேன் என்றார். இப்போது அந்த மந்திரிக்கு புரிந்தது. குரங்கையும் மனதையும் அடக்கி வைத்திருக்கின்ற வரைக்கும் தான் அடங்கியிருக்கும் என்று.

சில சமயம் குரங்கை விட மோசமான மனதெல்லாம் கூட எங்கள் ஆட்கள் சில பேரிடம் உண்டு. திருக்குற்றாலத்திலே ஒரு தடவை ஒரு ஆள் கையிலே வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாக ஓடிக்கொண்டிருந்தார். பின்னாலே குரங்கு துரத்திக் கொண்டே வந்தது.

அதற்கு பின்னாலே ஒருவர் அவர்கள் இரண்டு பேரையும் துரத்திக்கொண்டு வெறுங்கையோடு ஓடிக்கொண்டிருந்தார். வழியிலே ஒருவர் இந்த ஆளை தடுத்து நிறுத்திக் கேட்டார். அந்த ஆள் தான் கையிலே வாழைப்பழம் வைத்திருக்கின்றார். குரங்கைப் பாரத்ததும் ஓடுகின்றார். குரங்கு அந்த வாழைப்பழத்தைப் பார்த்துவிட்டு அதன் பின்னாலே ஓடுகின்றது. அது நியாயம்.

நீ சம்பந்தம் இல்லாமல் இப்படி அவர்கள் பின்னாலே ஓடுகின்றாயே இது என்ன நியாயம் என்றார். நான் ஓடுவது நியாயம் என்றார் இவர். எப்படி என்றார் அவர். அந்த ஆள் என் கடையிலே தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகின்றான் சார் என்று சொல்லிவிட்டுத்துரத்த ஆரம்பித்தார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்யுங்கள்

## பெற்றோர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் வடக்கு, றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் நேற்று திங்கட்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் வள பற்றாக்குறைகள் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளை சுட்டிக்காட்டி பாடசாலை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்ட பெற்றோர், சில மணி நேரம் பிரதான வீதியை மறித்தும் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

நீண்ட காலமாக பாடசாலை பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வரும் நிலையில் அதிகாரிகள் அது தொடர்பில் கவனம் செலுத்தவில்லை எனவும் இதனால் பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்பட்டு அவர்களின் எதிர்காலம் நிச்சயமற்ற தன்மையாகக் காணப் படுவதாக பெற்றோர்கள் கவலை தெரிவித்தனர். (6-8-33)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இதன்போது வெள்ளிவிழா மலர் வெளியீடும், 25 வருடங்களுக்கு மேல் பல்கலைக்கழகத்தில் சேவையாற்றியவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

(படம்: சிவசாந்தன்)



# சோழியபுரம் பத்ம வெளியீடு

**எம் இனிய நெஞ்சங்களே!**

விநாயகன் என்றால் தனக்கு மேலாக ஒரு தலைவன் இல்லாதவன் என்று பொருள். எடுக்கும் காரியம் எதுவாக இருந்தாலும் அது தடையில்லாமல் சுலபமாக நிறைவேறுவதற்கு விநாயகரை வணங்க வேண்டும். விநாயகரை வணங்கி செய்யும் காரியங்களை விநாயகரே முன்னின்று நடத்தித் தருவார். அவரை வணங்காமல் செய்யும் காரியங்களுக்கு தடைகளை உருவாக்குவதே அவரது பணியாகும். எனவே தான் நல்ல காரியங்கள் செய்யும் போது கணபதி பூஜை, கணபதி ஹோமத்துடன் தொடக்குவார்கள்.

**விநாயகப் பெருமான் தோன்றியதற்குக் காரணம்...**

அசுரர்கள் தேவர்களைக் கொடுமை செய்து துன்புறுத்தினார்கள். தேவர்கள் துன்பத்தைத் தாங்க முடியாது சிவபெருமானிடம் சென்று அழுது முறையிட்டார்கள். அவ்வேளை தேவர்களின் துன்பங்களை போக்குவதற்குத் தோன்றியவர் தான் விநாயகர். அந்தக் கதையை கூறுவது தான் பிள்ளையார் கதை படித்தல் அதாவது தேவர்கள் விநாயகரை வேண்டி 20 நாட்கள் விரதமிருந்து விநாயகர் வந்து அசுரர்களை கொன்று 21ஆம் நாள் பெருங்கதை தேவர்களின் விடுதலைச் சந்தோசக் கொண்டாட்ட நாளாகும்.

**விநாயகரை வணங்கும் போது குட்டிக்கும்பிடுவதற்கு காரணம்..**

தேவர்களை அசுரர்கள் துன்பப்படுத்தும் போது விடியவிடிய தோப்புக் கரணம் போட்டு நெற்றியிலே குட்டி எங்களைக் கும்பிட வேண்டும் என்று கொடுமை செய்தார்கள். விநாயகர் வந்து அசுரர்களைக் கொன்று தங்கள் கொடுமைகளைப் போக்கியதால் தேவர்கள் தங்கள் விடுதலைச் சந்தோஷத் தை வெளிக்காட்டுவதற்கு விநாயகருக்கு தோப்புக்கரணம் போட்டு நெற்றி யிலே குட்டிக் கும்பிட்டார்கள். அதனை விநாயகரும் ஏற்றுக் கொண்டார். எனவே விநாயகரை வணங்கும் போது தோப்புக்கரணம் போட்டு நெற்றியிலே குட்டி வணங்கவேண்டும். அப்போது தான் பலன் கிடைக்கும். குட்டிக் கும்பிட்டதால் கிடைத்த பலன்..

கந்தபுரணத்திலே முருகப் பெருமானை வள்ளி திருமணம் செய்ய ஏமாற்றுகிறார். நீ எதற்குப் பயம் என்று முருகப்பெருமான் கேட்கின்றார். யானைக்குப் பயம் என்று வள்ளி கூறுகின்றார். உடனே முருகன் அண்ணாவை நினைக்கின்றார். அண்ணா! அண்ணா! என்று கூப்பிடுகின்றார். அப்போது விநாயகரும் கேட்டும் கேளாதது போல் இருக்கின்றார். இரண்டாவது முறையாகவும் அண்ணா! அண்ணா! என்று கூப்பிடுகின்றார். அப்போதும் கேளாதது போல இருக்கின்றார். ஏன் அண்ணா கூப்பிடும் போது வரவில்லை என்று யோசிக்கின்றார். ஓகோ அண்ணாவை வணங்கவில்லை. அதனால் தான் வரவில்லை. என்று உணர்ந்து எழுந்து நின்று தோப்புக்கரணம் போட்டு நெற்றியில் குட்டி வணங்கிவிட்டு அண்ணா என்று கூப்பிடுகின்றார். உடனே யானை வருகின்றது. வள்ளியோ பயத்தினால் முருகனிடம் ஓடி வருகின்றார். இப்போது சொல்லு என்னை கலியாணம் செய்கின்றாயா? ஓமோம் செய்வேன் என்பார் வள்ளி. யானை போய்விடும் உடனே வள்ளி திருமணம் செய்ய மாட்டேன் என்று கூறுகிறார். திரும்ப முருகன் அண்ணாவை நினைப்பார். யானை வரும் வள்ளியும் ஓடிவருவார். இப்போது சொல் என்றார் முருகன். பயத்தினால் திருமணம் செய்வேன் என்றார் வள்ளி. யானை போய்விடும் பின்பு வள்ளி செய்ய மாட்டேன். என்று ஏமாற்றி விடு வார். முருகனும் மீண்டும் அண்ணா வைக் கூப்பிடுகின்றார். யானை வரு கின்றது. இப்போது என்ன செய்யப் போகின்றாய் என்று கேட்டார் முருகன். இப்போது பயத்தினால் திருமணம் செய்கின்றேன் என்று கூறுகின்றார் வள்ளி.

ஆனால் வந்த யானை போகாது நின்றுவிடும். முருகன் அச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீ சத்தியம் செய்தால் தான் யானை போகும் என்பார். உடனே (ச)வள்ளி சத்தியம் செய்கின்றார். யானையும் போய்விட்டது. வள்ளி திருமணம் நிறைவேறுகின்றது. இங்கே நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை...

1. தோப்புக்கரணம் போட்டுக் குட்டிக் கும்பிட்டால் தான் விநாயகனின் அருள் கிடைக்கும்.

2. ஏமாற்றுபவர்கள் நெடுக ஏமாற்ற முடியாது.

3. விநாயகரை வணங்காத எந்தக் காரியமும் நிறைவேறாது.

4. சகோதரர்கள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்க வேண்டும்.

5. முருகன் சந்தர்ப்பத்தை பயன் படுத்தியது போல் மனிதரும் இறைவன் தரும் சந்தர்ப்பம் சூழ்நிலைகளைப் பயன்படுத்தி வெற்றி காண வேண்டும்.

**தெய்வ தண்டனையில் இருந்து யாரும் தப்பி விட முடியாது.**

இதற்கு ஐயா மட்டும் என்ன விதி விலக்கா. ஐயாவும் தப்ப முடியவில்லை. கேளுங்கள் ஐயாவின் வெளிநாட்டுப் பயணக்கதையை...

**என் அன்பு உள்ளங்களே**

வெளிநாட்டு எண்ணம் யாரைத் தான் விட்டு வைத்தது. அடியேனையும் விட்டு வைக்கவில்லை. ஆசிரியராக பணி புரியும் போது வெளிநாட்டு எண்ணம் வந்துவிட்டது. வயது 35. இந்த வயதிலே தானே உழைக்க முடியும். கொஞ்சம் சம்பாதித்து விட்டு வந்து பிள்ளையாரோடு இருக்கலாம். என்ற எண்ணம் வந்துவிட்டது. உடனே வெளி நாட்டில் இருக்கும் நண்பர்களிடம் கூறினேன் அவர்களும் வரச்சொல்லி உற்சாகப்படுத்தினார்கள். பிடிபட்டால் நாங்கள் மீட்போம் என்று வாக்குறுதியும் தந்துவிட்டார்கள். மூன்று வருட சம்பளமற்ற லீவு போட்டுவிட்டு ஐயா செல்கின்றார் வெளிநாடு. மனைவியும் அதற்கு மறுப்பு தெரிவிக்கவில்லை காரணம் வெளிநாடு போவது விருப்பமில்லை. இருந்தும் தான் தடுத்ததாக இருக்கக் கூடாது என்ற நோக்கம் ஐயா வெளிநாடு போவதற்கு கொழும்பிற்கு வந்தாச்சு. முகவர் வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்து போவதாக விமான நிலையத்தில் சொல்லச் சொல்லி சொன்னாரகள். சரி என்று எல்லா ஆயத்தங்களும் முடிந்தன. என்னுடன் மூன்று பேர் இந்த இத்தாலி விசாவுடன் புறப்படுகின்றோம். பின்னர் இத்தாலி உரோம் சர்வதேச விமான நிலையத்தில் எல்லோரையும் இறக்கி விட்டனர். மூவரும் ஒன்றாக நின்று உட் செல்லுகின்றோம். முதலில் நின்றவரின் பாஸ்போர்ட்டை பார்த்து விட்டு சரி போகலாம் என்றார்கள். அடுத்தது நான். எனது பாஸ்போர்டை பார்த்து விட்டு அங்கே இருந்த இடத்தில் பெயரைக் கேட்டார்கள். அங்கே இருந்தால் தானே சொல்வதற்கு. மறந்தது மாதிரி யோசித்து கொண்டு நின்றேன். உடனே அருகில் நிற்கும் படி கூறி விட்டு அடுத்தவரையும் கேள்வி கேட்டார்கள். அவராலும் பதில் சொல்லவும் முடியவில்லை. அவரையும் என்னுடன் நிற்கச் சொன்னார்கள். மிகுதி எல்லோரும் உள்ளே போய் கொண்டு இருக்கிறார்கள். இன்னொரு பாதையில் வெளியே சென்ற சனக் கூட்டத்தினுள் நுழைந்து மறைந்து வெளியேறுவதற்காக மெல்ல மெல்ல நடக்கத் தொடங்கினேன். காரணம் பிடிபட்டால் நாங்கள் மீட்போம் என்பது வாக்குறுதி. துணிச்சலாகப் போய்க் கொண்டு இருக்கின்றேன். பெரிய விசில் சத்தம் ஒன்று கேட்கின்றது. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும் என்பது போல எனக்குத் தானே விசில் சத்தம் என்று பயப்படவில்லை. காரணம் பிடிபட்டால் மீட்போம் வாக்குறுதி ஞாபகத்தில் இருக்கின்றது.

உடனே பிற்பக்கமாக திரும்பிப் பார்க்கின்றேன். பிற்பக்கமாக பொலிஸ் பெரிய நாயுடன் வந்து எனது சேட் கொலரில் பிடித்து விட்டார். நல்ல காலம் நான் ஒரு குடும்பியில்லாத ஐயர் இதனால் தான சேட் கொலரில் பிடித்தார் போலும். விமான நிலையத்திற்கு நடக்கச் சொல்லி கையிலே பிடித்துக் கொண்டு வந்து சேர்ந்தார். அப்போதும் பயப்படவில்லை மீட்போம் வாக்குறுதி மற்றவரும் என்னுடன் நிற்கின்றார். எங்கள் கால கஷ்டம் நண்பர்கள் ஒன்றும் செய்யமுடியவில்லை காரணம் கிறிஸ்மஸ் காலம் வேலையாட்கள் எல்லோரும் விடுமுறையில் சென்று விட்டார்கள். ஒன்றும் எதுவும் செய்யமுடியாத நிலையில் இருவரும் தப்பினோம் பிழைத்தோம் என்று தாய் நாட்டிற்கு வந்து சேர்ந்து விட்டோம். அத்துடன் வெளிநாட்டு எண்ணமும் நின்று விட்டது. பார்த்தீர்களா தெய்வ தண்டணையை இதற்குப் பின்னர் தான் எனது ஆன்மீகப் போராட்டம் தொடங் கியது.

இதை ஏன் எழுதுகிறேன் என்றால் அடியேன் வந்து பின்னர் எமது ஆலயத்தில் உபயம் செய்யும் அடியவரிடம் கனவில் பிள்ளையார் சென்று பிறைசூடி ஐயாவைத் தெரியுமா என்று கேட்கின்றார். அதற்கு அடியவர் ஓமோம் தெரியும் எங்கள் கோயில் ஐயா என்று கூறுகின்றார். அவர் வெளி நாட்டுக்குப் போனவர் ஏன் வந்தவர் என்று கேட்கின்றார்.

தெரியவில்லை என்றார். அடியவர் அதற்கு நான் தான் அவரைக் கொண்டு வந்தது என்னுடைய காரியங்கள் அவனொருவனால் தான் செய்ய முடியும் என்று கூறி மறைந்துவிட்டாராம். விழுந்தால் ஆவணிச் சதுர்த்தி பாற் காவடிகள் வரப் போகின்றன. அடியேன் ஆயத்தங்கள் செய்து கொண்டு இருக்கின்றேன்.

அடியவர் ஓடி வந்து கண்ட தர்சனத்தை கூறுகின்றார். என்னை நன்றாக இறைவன் படைத்தனன். தன்னை நன்றாகத் தமிழ் செய் வதற்கே என்று உணர்ந்து கொண்டு அவருடைய காரியங்களைச் செய்து கொண்டு இருக்கின்றேன். அவர் திருப்பாதம் போற்றி! போற்றி! போற்றி!

சோழியூரான் பிறைசூடிக்குரு

([illegible] வாதியும், ஓய்வு நிலை ஆசிரியரும், பரம்பரைப் பரிபாலகரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 618





பழையபடி குறுக்கு வழியில் விரைவாகச் சென்று குந்தவைதேவி வானதியை மூர்ச்சை தெளிவித்துக் கொண்டிருந்த கொடி வீட்டைக் கண்டுபிடித்தான். வந்தியத்தேவனிடம் இளைய பிராட்டி கூறிய கடைசி வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டே சென்று அரண்மனை முற்றத்தில் நடக்கும் அமர்க்களத்தைப் பற்றி அறிவித்தான்.

இளைய பிராட்டி வானதிக்குச் சைத்யோபசாரம் செய்யும் வேலையைப் பணிப் பெண்களிடம் ஒப்புவித்து விட்டு, அவசரமாகக் கிளம்பினாள். இளையபிராட்டி குந்தவை தேவி அரண்மனை மேல் மாட முகப்பில் செம்பியன் மாதேவியின் அருகில் நெருங்கியபோது அந்த மூதாட்டியின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுவதைக் கவனித்தாள். அந்தக் காட்சி குந்தவையின் கண்களிலும் கண்ணீர் பெருகச் செய்தது. இதைக் கண்ட ஜனசமூகம் மேலும் துயர சாகரத்தில் மூழ்கியது.

"பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கவில்லை. பழுவேட்டரையர்கள் கொன்று விட்டார்கள். அவர்களைப் பழிக்குப் பழி வாங்க வேண்டும்!"

சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்கள் சிறையில் வைத்திருக்கிறார்கள். அவரை விடுவித்து அழைத்து வர வேண்டும். இளவரசி கட்டளையிட்டால் இந்தக் கணமே நாங்கள் புறப்படச் சித்தமாயிருக்கிறோம்.

இவ்வாறெல்லாம் அந்தக் கூட்டத்திலிருந்தவர்கள் இளைய பிராட்டியைப் பார்த்துக் கூறினார்கள்.

குந்தவையின் மனம் தீவிரமாகச் சிந்தித்தது. இளவரசர் உயிரோடிருக்கிறார் என்ற உண்மையை இப்பொழுது வெளியிடக் கூடாது. ஆனால் ஜனங்களையும் சமாதானப் படுத்தி அனுப்ப வேண்டும். அதற்கு ஒரு வழி தோன்றியது.

கண்ணில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, ஜனக் கூட்டத்தின் முன்வரிசையில் நின்றவர்களை இளவரசி நோக்கினாள். அதற்குள் ஆழ்வார்க்கடியானும், வந்தியத்தேவனும் அங்கே வந்து நின்று கொண்டிருந்தார்கள். ஆழ்வார்க்கடியானைப் பார்த்து இளையபிராட்டி மேலே வரும்படி சமிக்ஞை செய்தாள். ஆழ்வார்க்கடியான் அவ்விதமே மேலே ஏறிச் சென்றான். அவனிடம் குந்தவை மெல்லிய குரலில் ஏதோ கூறினாள்.

ஆழ்வார்க்கடியான் ஜனங்களைப் பார்த்துக் கையமர்த்தினான். இடி முழக்கம் போன்ற பெரிய குரலில் கூறினான்:

பொன்னியின் செல்வர் இறந்திருப்பார் என்று இளைய பிராட்டியினால் நம்ப முடியவில்லை. முன்னொரு சமயம் காவேரித்தாய் இளவரசரை ஏந்திக் காப்பாற்றியதுபோல் சமுத்திர ராஜனும் அவரைக் காப்பாற்றியிருப்பான் என்று நம்புகிறார். நிமித்தக்காரனைக் கேட்டதில் அவனும் அப்படியே சொல்கிறானாம். இளவரசரைத் தேடிக் கண்டு பிடிக்க இளைய பிராட்டி தக்க ஏற்பாடு செய்வார். உங்களையெல்லாம் நிம்மதியாக வீட்டுக்குத் திரும்பிப் போகும்படி கேட்டுக் கொள்கிறார்!"

இதைக் கேட்டதும் அந்த ஜனக் கூட்டத்தில் ஒரு பெரிய ஆசுவாச நெடுமூச்சைப் போன்ற சத்தம் எழுந்தது. "நிமித்தக்காரன் எங்கே? அவன் வாயினால் நாங்களும் அந்த நல்ல செய்தியைக் கேட்கிறோம்" என்றார் ஒருவர்.

இதுதான் சமயம் என்று வந்தியத்தேவன் தாவிக் குதித்து மேல் மாடத்துக்குச் சென்றான்.

(தொடரும்)

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

# பணிவின் பயன்



வயதாகிவிட்ட ஒரு சிங்கம் தனக்கு பதிலாகத் தலைமையேற்க வாரிசு தேடியது. தான் சாகும் வரையிலும் தனக்குப் பாதுகாப்பாகவும் பணிந்து நடப்பதாகவும் இருக்க வேண்டும் என்று எண்ணியது.

மிருகங்களுக்கெல்லாம் அழைப்பு விடுத்து தன் விருப்பத்தைக் கூறியது.

புலி ஒரு மாட்டை அடித்துக் கொண்டு வந்து தன் விருப்பத்தை கூறியது.

கரடி ஒரு ஆட்டை அடித்து கொண்டு வந்து சிங்கத்தின் முன்னால் அடக்க ஒடுக்கமாக வைத்து கைகட்டி நின்றது.

ஓநாய் கடலின் குறுகிய தரையில் தவழ்ந்து வந்து சிங்கத்தின் கால்களை நக்கியபடி படுத்துக்கொண்டது. புலியும், கரடியும் ஏளனமாக ஓநாயைப் பார்த்துச் சிரித்தன. இரண்டும் தனக்குத் தான் தலைமைப் பதவி கிட்டப் போகிறதென்று மகிழ்ச்சியாக நோக்கின.

சிங்கம் அமைதியான மூன்றையும் பார்த்து ஓநாயைத் தன் வாரிசாக நியமிப்பதாக அறிவித்தது.

# பூனைக்குட்டி பாடல்

மியாவ் மியாவ் பூனைக்குட்டி - இவன்
மீசைக்காரப் பூனைக்குட்டி
வீட்டைச் சுத்தும் பூனைக்குட்டி - இவன்
எங்கள் வீட்டுச் செல்லச்சுட்டி - இவன்
எங்கள் வீட்டுச் செல்லக்குட்டி
என் அருமைப் பூனைக் குட்டி

பரண்மேல் பாய்ந்தனே
பாத்திரங்கள் உருட்டும் குட்டி
கோபம் கொண்ட பாட்டியிடம்
கொஞ்சிக்கொஞ்சி விளையாடும் சுட்டி

மியாவ் மியாவ் பூனைக்குட்டி -இவன்
மீசைக்காரப் பூனைக்குட்டி

நாயும் இவன் நண்பன் குட்டி
வாத்தும் இவன் தோழி குட்டி



ரா.அத்விக்செனோன்,
பிள்ளைக் கனியமுது முன்பள்ளி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று நாம் செய்யும் ஒவ்வொரு செயலும் நம் வாழ்க்கைத் தோட்டத்தில் விதைக்கப்படும் விதைகள் – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாக்குச்சீட்டின் மாதிரியை மக்களுக்குத் தெரியப்படுத்துங்கள்

பொதுத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக்குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குச்சீட்டின் நீள அகலம் அமையவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிட்டதன் காரணமாக வாக்குச்சீட்டின் அளவு நீண்டிருந்ததால், வாக்காளர்கள் குழப்பமடைந்தனர்.

அதிலும் யாழ்ப்பாணத்தில் முதற்தடைவையாக வாக்களித்த ஓர் இளைஞன், வாக்குச்சீட்டை இரண்டாகக் கிழித்து தான் வாக்களிக்கின்ற சின்னத்துக்குப் புள்ளடியிட்டு விட்டு, மிகுதியை வீசிய சம்பவம் பொலிஸ் விசாரணைவரை சென்றமை யாவரும் அறிந்ததே.

குறித்த இளைஞனை விசாரித்தபோது; வாக்குச்சீட்டு நீளமாக இருந்ததால், தேவையற்ற பகுதியைக் கிழித்து அதனை நீக்கினேன் என்று விளக்கமளித்திருந்தார்.

ஆக, வாக்குச்சீட்டானது வாக்களிப்பதற்காக வைக்கப்படுகின்ற மேசையின் நீளத்தையும் கடந்து நீண்டிருக்குமாயின், அதில் குறித்த கட்சியின் அல்லது சுயேட்சைக் குழுவின் சின்னத்தைத் தேடிக் கண்டறிவதென்பது கடினமான காரியமே.

அதிலும் குறிப்பாக, முதியவர்கள் இவ்வாறான வாக்குச் சீட்டில் தாம் தெரிவு செய்ய வேண்டிய சின்னத்தை கண்டறிய முடியாத நிலையில் – அதிக நேரத்தையும் அந்த இடத்தில் செலவிடமுடியாத சூழ்நிலையில், ஏதோவொரு சின்னத்துக்கு வாக்களித்து விட்டு வெளியேறுகின்ற துர்ப்பாக்கிய நிலை ஏற்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே செல்லுபடியற்ற வாக்குகள் அதிகரிக்கின்ற நிலைமை உருவாகிறதென்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கது.

தவிர, ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பாக வாக்குச்சீட்டின் மாதிரியை தேர்தல் திணைக்களம் பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் வாயிலாக வாக்காளர்களுக்குத் தெரியப்படுத்தியிருக்க வேண்டும்.

அவ்வாறு தெரியப்படுத்துகின்ற நடைமுறை முன்னைய காலங்களில் இருந்துள்ளது.

அத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றாததன் காரணமாக வாக்காளர்கள் வாக்களிப்பின்போது சிரமப்பட வேண்டியதாயிற்று.

எனவே அத்தகையதொரு நிலைமை நடைபெறப்போகும் பொதுத் தேர்தலில் இடம்பெறாமல் இருப்பதன் பொருட்டு, அந்தந்தத் தேர்தல் மாவட்டங்களின் வாக்குச்சீட்டுக்களின் மாதிரிகளைப் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்கு ஏதுவாகப் பொது இடங்களில் அவற்றைக் காட்சிப்படுத்த வேண்டும்.

இவ்வாறு காட்சிப்படுத்துவதன் மூலம் வாக்காளர்கள் தாம் தெரிவு செய்கின்ற சின்னத்தை இனங்கண்டு வாக்களிப்பது சுலபமாக இருக்கும்.

எனவே இது விடயத்தில் தேர்தல் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுப்பது அவசியமானதாகும்.

# அநுர அரசாங்கத்தின் ஐ.எம்.எப்புடனான பேச்சு வார்த்தை தோல்வியடைந்துள்ளது

## சஜித் பிரேமதாச

(கொழும்பு)

அநுர அரசாங்கத்தின் சர்வதேச நாணய நிதியத்துடனான இரண்டு பேச்சுவார்த்தைகளும் தோல்வியில் முடிவடைந்துள்ளதாக முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஹோமகவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு, அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்

சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி மக்களின் வரிச்சுமைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தற்போதைய ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் கூறியிருந்தார்.

அவர் சர்வதேச நாணய நிதியத்துடன் நடத்திய 2 கலந்துரையாடல்களும் தோல்வியடைந்துள்ளன.

அந்த ஒப்பந்தத்தில் எவ்வித திருத்தங்களையும் மேற்கொள்ள முடியாது போயுள்ளமையினால், மக்கள் பாரிய வரிச்சுமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

அத்துடன், புதிய இராஜதந்திர உறவுகளைப் பேணுவதற்கு, அவருக்கு இருந்த 2 சந்தர்ப்பங்களையும், தற்போதைய ஜனாதிபதி தவறிவிட்டார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி உறுதியான வெற்றியைப் பெறும் சந்தர்ப்பத்தில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடி மக்களுக்கான சலுகைகளைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இதுவரை உருவாக்கப்பட்ட தேசியப் பொருளாதாரப் பிரச்சினைக்கு மத்தியில் சுற்றுலாத் துறைக்கு ஏற்பட்டுள்ள தாக்கமானது கற்பனை செய்து பார்க்க முடியாத விடயமாக அமைந்துள்ளது.

யார் ஜனாதிபதியாக இருந்தாலும் இந்த நாட்டிற்குப் பாதிப்பு ஏற்படக் கூடாது என்றே தாம் பிரார்த்திப்பதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-7)

# கரந்தனில் தேர்தல் வன்முறை

## கைதானவர்கள் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தேர்தல் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது வன்முறைக் கும்பல் ஒன்றினால் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்த தமிழ் மக்கள் கூட்டணியினரை சேர்ந்த மூவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்திய நிலையில் மன்று அவர்களை பிணையில் செல்ல அனுமதித்துள்ளது.

கடந்த சனிக்கிழமை நீர்வேலி கரந்தன் பகுதியில் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் மான் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் மக்கள் கூட்டணியினர் பிரச்சார நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த வேளை முச்சக்கர வண்டியில் வந்த நால்வர் அடங்கிய கும்பல் தாக்குதலை மேற்கொண்ட பின்னர் அங்கிருந்து சென்று, மீண்டும் சுமார் 30 பேருடன் வந்து பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

அதில் பெண் உள்ளிட்ட மூவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில், தாக்குதலுக்கு இலக்கானவர்கள் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்த நிலையில், தாக்குதலை மேற்கொண்டதாக குற்றம் சாட்டப்படும் தரப்பினரும் பரஸ்பர முறைப்பாட்டினை பொலிஸ் நிலையத்தில் வழங்கியிருந்தனர்.

அதனை அடுத்து பொலிஸார், தாக்குதலுக்கு இலக்காகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த தமிழ் மக்கள் கூட்டணியின் ஆதரவாளர்களுக்கு வைத்தியசாலையில் கட்டிலுடன் கைவிலங்கிட்டு சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

இந்நிலையில் தாக்குதலுக்கு இலக்கான மூவர் மற்றும் தாக்குதலை மேற்கொண்டனர் என குற்றம் சாட்டப்பட்ட ஐவர் என 08 பேரையும் யாழ். நீதவான் நீதிமன்றில், நேற்றுத் திங்கட்கிழமை கோப்பாய் பொலிஸார் முற்படுத்தினர்.

அதன் போது தாக்குதலுக்கு இலக்கானவர்கள் சார்பில், சிரேஷ்ட சட்டத்தரணி வி. திருக்குமரன் தலைமையில், 12 சட்டத்தரணிகள் மன்றில் தோன்றினர்.

அதனைத் தொடர்ந்து நடைபெற்ற வழக்கு விசாரணைகளை அடுத்து, அனைவரையும் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வழக்கினை எதிர்வரும் ஜனவரி மாதம் 21 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது. (ம-7,33)

## ரூபாவின் பெறுமதி உயர்வு

(கொழும்பு)

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ நாணய மாற்று விபரங்களுக்கு அமைவாக அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது நேற்று முறையே 289.06 ரூபாவாகவும், 298.11 ரூபாவாகவும் உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் மற்றும் விற்பனைப் பெறுமதியானது முறையே 289.15 ரூபாவாகவும், 298.20 ரூபாவாகவும் காணப்பட்டிருந்தது.

மத்திய கிழக்கு நாணயங்களுக்கு நிகராக ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சி அடைந்த நிலையில், ஏனைய பிரதான வெளிநாட்டு நாணயங்களுக்கு நிகராக அதன் பெறுமதி உயர்ந்துள்ளது. (ம-7)

## பரிசளிப்பு விழாவும் நினைவு தினமும்

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும் நவ மகாஜனச் சிற்பி தெ.து.ஜயரத்தினம் நினைவு தினமும் இன்று செவ்வாய்க்கிழமை (29.10.2024) காலை-08.30 மணி முதல் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் இ.புஸ்பரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடக் கணிதமும் புள்ளிவிபரவியலும் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ.லகீதரன், யாழ்.சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியர் திருமதி.சோபனா லகீதரன் ஆகியோர் பிரதம விருந்தினராகவும், தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.அரசகேசரி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.பருத்தித்துறையில் விபத்து; 3 பேர் காயம்

(கரணவாய்)

பருத்தித்துறையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 03 பேர் காயமடைந்துள்ளனர்.

பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் நேற்று இரு மோட்டார் சைக்கிள்கள் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது. இரு மோட்டார் சைக்கிள்களும் ஒன்றை ஒன்று முந்திச் செல்ல முற்பட்டபோதே, இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மோதுண்ட வாகனங்கள் சேதமடைந்துள்ளதுடன், காயமடைந்த மூவரும், மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரகைளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## இத்தாலி தூதரகத்தை புகைப்படம் எடுத்தவர்

### கைதாகி விளக்கமறியல்

இலங்கையில் உள்ள இத்தாலிய தூதரகத்தை புகைப்படம் எடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் எதிர்வரும் நவம்பர் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை, யாகொடமுல்ல பிரதேசத்தில் வசிக்கும் 54 வயதான ஒருவரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளவர் ஆவார்.

அவரைக் கைது செய்த பொலிஸார், அவரிடம் நடத்திய விசாரணையில் பல ஆவணங்களைக் கண்டுபிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர். (ம-7)



# இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்கள் வரலாறு பற்றிய ஒரு பார்வை - பகுதி I

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

15

இதேபோல் மற்றைய மாகாணங்களின் தொகுதிகளின் வாக்குப் பலத்தை ஒப்பிடும்போது பல வேறுபாடுகளைக் காணக்கூடிய தாகவுள்ளது.

1947ஆம் ஆண்டுத் தேர்தலில் மேல் மாகாணத்தில் 43 556 வாக்காளருக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையிலும் வட மத்திய மாகாணத்தில் 11 505 வாக்காளருக்கு ஒரு உறுப்பினர் என்ற அடிப்படையிலும் இருந்ததைக் காணக்கூடிய தாக உள்ளது.

மாகாண ரீதியாக 1947ஆம் ஆண்டுத் தேர்தல் முதல் 1977 ஆம் ஆண்டுத்தேர்தல் வரை வாக்குப்பலம் எவ்வாறு இருந்தது என்பதை அட்டவணை-6 காட்டுகிறது.

சுதந்திரத்திற்குப் பின் நடந்த 8 பாராளுமன்றத் தேர்தல்களிலும் கட்சிகள் பெற்ற ஆசனங்களை அட்டவணை 7 காட்டுகிறது.

அட்டவணை-6 மாகாண ரீதியாக வாக்குப்பலம் (ஒரு உறுப்பினருக்கு வாக்காளர் எண்ணிக்கை)

| மாகாணம் | 1947 | 1952 | 1956 | 1960மார்ச் 1960யூலை | 1965 | 1970 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|
| மேல் | 43556 | 45800 | 52414 | 31162 | 40606 | 47737 | 50215 |
| மத்திய | 32837 | 25701 | 39953 | 18227 | 23705 | 27779 | 32597 |
| தென் | 51289 | 49260 | 56444 | 31426 | 38502 | 43239 | 46291 |
| வடக்கு | 31171 | 29674 | 32318 | 24503 | 29484 | 32265 | 35227 |
| கிழக்கு | 21112 | 20708 | 24779 | 18161 | 24224 | 28321 | 32099 |
| வடமேல் | 31681 | 35143 | 41270 | 26826 | 33328 | 38954 | 42297 |
| வட மத்திய | 11505 | 15292 | 20855 | 15419 | 19754 | 26540 | 28849 |
| ஊவா | 17492 | 15241 | 19092 | 14273 | 18959 | 23682 | 25280 |
| சப்பிரகமுவ | 31244 | 30149 | 34711 | 23423 | 30146 | 34650 | 39698 |
| உறுப்பினர் எண்ணிக்கை | 95 | 95 | 95 | 151 | 151 | 151 | 168 |

அட்டவணை 7

| தேர்தல் ஆண்டுகள் | 1948 | 1952 | 1956 | 1960 மார்ச் | 1960 யூலை | 1965 | 1970 | 1977 |
|---|---|---|---|---|---|---|---|---|
| கட்சியின் பெயர்கள் | பெறப்பட்ட ஆசனங்களின் எண்ணிக்கை | | | | | | | |
| ஐக்கிய தேசிய கட்சி | 42 | 54 | 8 | 50 | 30 | 66 | 17 | 140 |
| சிறீலங்காசுதந்திரக்கட்சி | - | 9 | - | 46 | 75 | 41 | 91 | 8 |
| பொலசெவிக் லெனினிஸ்ட் கட்சி | 5 | - | - | - | - | - | - | - |
| இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சி | 7 | 4 | 1 | 1 | - | 3 | 3 | - |
| இலங்கை இந்தியா காங்கிரஸ் கட்சி | 6 | - | - | - | - | - | - | - |
| இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி | 3 | 1 | 3 | 3 | 4 | 4 | 6 | - |
| லங்கா சமசமாஜகட்சி | 10 | - | 14 | 10 | 12 | 10 | 19 | - |
| விப்லவக்காரி லங்கா சமசமாஜக்கட்சி | - | 3 | - | - | - | - | - | - |
| தொழிற்கட்சி | 1 | 1 | - | - | - | - | - | - |
| போதிசத்துவபண்டாரநாயக்கமுன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் | - | - | - | - | - | - | - | 1 |
| இலங்கைத்தமிழரசுக்கட்சி | - | 2 | 10 | 15 | 16 | 14 | 13 | - |
| தேசியவிடுதலைமுன்னணி(JVP) | - | - | - | 2 | 2 | 1 | - | - |
| லங்காஜனநாயகக்கட்சி | - | - | - | 4 | 2 | 5 | - | - |
| ஒருங்கிணைந்த மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | - | - | 51 | - | - | - | - | - |
| மக்கள் ஐக்கிய முன்னணி கட்சி | - | - | - | 10 | 3 | 1 | - | - |
| புதிய (நவ) லங்காசமசமாஜகட்சி | - | 9 | - | - | - | - | - | - |
| சோசலிசமக்கள்முன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| இலங்கைதேசியமுன்னணி | - | - | - | 1 | - | - | - | - |
| தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி (TULF) | - | - | - | - | - | - | - | 18 |
| சுயேட்சை | 21 | 11 | 8 | 7 | 7 | 6 | 2 | 1 |
| குடியரசுக் கட்சி | - | 1 | - | - | - | - | - | - |
| மொத்தம் | 95 | 95 | 95 | 151 | 151 | 151 | 151 | 168 |

### 1978இன் இரண்டாம் குடியரசு அரசியலமைப்பு

1978 செப்ரெம்பர் 7 ஆம் திகதி தேசிய அரசுப் பேரவை முதலாம் குடியரசு அரசியலமைப்புக்கு பதிலாக இரண்டாம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பொன்றை அறிமுகப்படுத்தியது.

இன்றுவரை அது 22 முறை திருத்தியமைக்கப்பட்டது. அது 1972 ஆம் ஆண்டின் இலங்கை அரசியலமைப்புக்கு பதிலாக பதிலீடு செய்யப்பட்டதோடு பிரித்தானிய பொதுநலவாய சபைக்குள் டொமினியன் நாடொன்றாக சுய நிர்ணய ஆட்சிமுறை கிடைக்கப் பெற்றதன் பின்னர் உருவான மூன்றாவது அரசியலமைப்பாக விளங்கியது.

புதிய அரசியலமைப்பினால் ஒரு தனியான சட்டவாக்கத் துறையும் ஒரு நிறைவேற்று ஜனாதிபதிப் பதவியும் அறிமுகம் செய்யப்பட்டன. புதிய அரசியலமைப்பினால் பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தேர்தல் மாவட்டங்களிலிருந்து விகிதாசாரப் பிரதிநிதித்துவமுறையின் கீழ் நியமனம் செய்யப்படுகின்ற 196 உறுப்பினர்களுடன் கூடிய பாராளுமன்றமொன்று உருவாகியது.

14 ஆம் அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225 வரை அதிகரிக்கப்பட்டது. இவ்வரசியலமைப்பினால் சுயாதீனமான நீதிமன்றமும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஓம்புட்ஸ்மன்) ஒருவரும் தேசிய ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் மற்றும் சிற் சில வரைபுகள் தொடர்பாக மக்கள் தீர்ப்பை நடத்துதலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

1988 ஆம் ஆண்டு நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கும் சட்டத்தினூடாக பிரஜாவுரிமையும் வாக்குரிமையும் அற்றுப் போயிருந்த தோட்டப் பிரதேசங்களிலும் ஏனைய பகுதிகளிலும் வாழ்ந்த இந்திய வம்சாவளியினர்களான தமிழர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப்பட்டமை இலங்கை தேர்தல் வரலாற்றில் ஒரு முக்கியமான மைல் கல்லாகும். இவை பற்றி விரிவாக பகுதி II இல் பார்ப்போம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீண்டும்...

ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கொழும்புக் கோட்டையில் நேற்று அதிகாலை 5.45 மணிக்கு புறப்பட்ட யாழ் தேவி புகையிரதம் மதியம் ஒரு மணியளவில் யாழ்ப்பாணத்தை வந்த டைந்தது.

இன்று காங்கேசன்துறையிலிருந்து காலை 10.30 மணிக்கு புறப்பட்டு 10.53 இற்கு யாழ்ப்பாணம் பிரதான தொட ருந்து நிலையத்தை வந்தடைந்து 11 மணிக்கு கொழும்பு நோக்கிப் புறப்படும்.

மஹவ மற்றும் அநுராதபுரம் இடை யிலான புகையிரத மார்க்கத்தின் நவீன மயமாக்கல் பணிகள் நிறைவடைந்த நிலையில், வடக்குப் புகையிரத சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## ஊழல்...

தேசிய கொள்முதல் ஆணைக்குழு வின் அதிகாரிகளுடன் நேற்று ஜனாதி பதி செயலகத்தில் இடம்பெற்ற கலந் துரையாடலின்போதே ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய கொள்முதல் சட்டம் மற்றும் கொள்முதல் நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுடன் இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க விரிவாகக் கலந்துரை யாடினார்.

தற்போதுள்ள சட்டம் மற்றும் வழி காட்டுதல்களின்படி கொள்முதல் பணி கள் மேற்கொள்ளப்படாமை தொடர் பில் உள்ள சிக்கல்களை அதிகாரிகள் ஜனாதிபதியிடம் முன்வைத்தனர்.

அரசாங்கத்தின் மூலதனச் செலவு கள் உட்பட அனைத்து செலவினங் களில் சுமார் 60% முறையான கொள் முதல் செயன்முறைக்கு உட்படுத்தப் பட வேண்டும் என்றும், ஆனால் மேற் படி கொள்முதல் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகள் காரணமாக, அரசாங் கத்திற்கு பாரிய நஷ்டம் ஏற்படுவதாக வும் தேசிய கொள்முதல் ஆணைக் குழுவின் அதிகாரிகள் ஜனாதிபதியி டம் சுட்டிக்காட்டினர்.

இதன் காரணமாக மோசடி மற்றும் ஊழலுக்கு அதிக வாய்ப்புள்ளதாக அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

கொள்முதல் செயற்பாட்டில் ஏற் படக்கூடிய தாமதங்கள், வெளிப்படைத் தன்மையற்ற நடைமுறைகள் மற்றும் செயற்திறன் இன்மை குறித்தும் இதன் போது விரிவாகக் கலந்துரையாடப்பட் டது.

முதலீட்டாளரால் தானாக முன் வந்து சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவு கள் (unsolicited proposals) மூலம் அரச தனியார் பங்காளித்துவத்தின் கீழ் கொள்முதல் செயற்பாட்டில் உள்ள குறைபாடுகளைக் குறைப்பது குறித் தும் இக்கலந்துரையாடலில் கவனம் செலுத்தப்பட்டது.

கொள்முதல் ஆணைக்குழுவின் அதிகாரங்களை மேலும் விரிவுபடுத்தி கொள்முதல் திட்டங்களை முறை மைப்படுத்த வேண்டியதன் அவசி யத்தையும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதிகாரிகளுக்குச் சுட் டிக் காட்டினார். (ம-7)

## தேர்தல் தொடர்...

தொடர்பாக சிரேஷ்ட தலைமை தாங் கும் அலுவலர்களுக்கான முன்னா யத்த செயலமர்வானது யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத் தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 09.30 மணி, பி. ப 02.00 மணி என இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இதேவேளை மு. ப 11.00 மணிக் கும் பி.ப 03.30 மணிக்கும் என இரண்டு கட்டங்களாகத் தபால் மூலம் வாக்களிப் பின்போது கண்காணிப்பு நடவடிக் கைக்குச் செல்லும் உதவித் தெரிவத் தாட்சி அலுவலர்கள் மற்றும் அலுவலர் களுக்கான செயலமர்வுகளும் நடை பெற்றன. (ம-7,33)

## தேர்தல் வாக்கு...

இதனைக் குறிப்பிட்டுள்ளார். நிர்க் கதிகளுக்கு மத்தியில் தமது வாழ்க் கையை நடத்தி வரும் மக்களுக்குத் தேர்தலில் வாக்குறுதியளித்தபடி அழுத் தங்களைக் குறைப்பதாக தற்போதைய ஜனாதிபதி தலைமையிலான அரசாங் கம் உறுதியளித்தது.

ஜனாதிபதித் தேர்தல் மேடைகளில் அநுர குமார திஸாநாயக்க கூறியது போல் ஆட்சி வந்தும் நேரடி மற்றும் மறை முக வரிகளை அவரால் குறைக்க முடி யாது போயுள்ளது. சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்தாலோசித்து உடன் படிக்கையை மாற்றியமைப்பேன் என்று தெரிவித்தார்.

இருந்த போதிலும், அவரால் இன்று அதனை மாற்றியமைக்க முடியாது போயுள்ளதாக சஜித் பிரேமதாஸ தெரி வித்துள்ளார்.

2028ஆம் ஆண்டு முதல் கடனை அடைப்பதாக முன்னாள் ஜனாதிபதி நாட்டையே சிக்கலில் தள்ளியுள்ளார்.

இதற்கு இன்னும் நான்கு வருடங் கள் மட்டுமே உள்ளது.

தற்போதைய பொருளாதாரத்தை வைத்துக் கொண்டு இந்தக் கடனை செலுத்த முடியாது.

இதற்கு விரைவான பொருளாதார வளர்ச்சி அவசியமாகும்.

அவ்வாறு இல்லை என்றால் 2028 ஆம் ஆண்டு நாடு மீண்டும் வங்கு ரோத்து நிலைக்குத் தள்ளப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். (ம-7)

## வேதன...

செய்தியாளர் சந் திப்பில் அவர் இத னைக் குறிப்பிட் டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 75 வருடங்க ளாக நாட்டிலி ருந்து வந்த அரசி யல் கலாசாரத் தையும் அதனால் ஏற்பட்ட தவறு களையும் சரி செய்து கொண்டு முன்னோக்கிப் பயணிக்க வேண் டும்.

நாட்டிலிருந்த கட்டமைப்புமூலம் குறுக்கு வழியி லும், தரம்குறைந்த மருந்து களையும் இறக்குமதி செய் யக்கூடிய வகை யிலான சுகாதார அமைச்சர் நிய மிக்கப்பட்டார்.

அவ்வாறு நிய மிக்கப்பட்டவர் கள் மிச்சம் வைத் துச் சென்றுள்ள தவறுகளை நாம் சரிசெய்து வரு கிறோம்.

தங்களால்மேற் கொள்ளப்பட்ட அரச பணியாளர் களுக்கு வேதன அதிகரிப்பை வழங்குவதற்கு நிதியை ஒதுக்கி யதாக அண்மை யில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். எனி னும், அது முற் றிலும் பொய்யான தாகும்.

நினைத்த உட னேயே ஜனாதி பதியினாலோ, பிரதமராலோ, அமைச்சரவையினாலோ வேதனத்தை அதிகரிக்க முடியாது.

அவ்வாறு ஒரு தீர்மானத்தை எடுத் தால் அதற்காக நிதியை ஒதுக்குவ தற்கு திறைசேரியின் அனுமதியைப் பெற வேண்டும்.

வேதன அதிகரிப்புக்கு அமைச் சரவை அனுமதி வழங்கியதாகத் தேர் தல் காலத்தில் ரணில் விக்கிரமசிங்க அறிவித்தார்.

எனினும், அதற்காக நிதி எதனை யும் ஒதுக்கவில்லை என திறைசேரி கூறுகிறது.

எனவே, பல வருட அரசியல் அனு பவமுள்ள ரணில் விக்கிரமசிங்க வேண்டு மென்றே அவ்வாறான அறிவிப்பை விடுத்துள்ளார்.

தற்போது, இடைக்கால அரசாங் கமே உள்ளது.

பல வேலைத்திட்டங்களை முன் னெடுப்பதற்கும், அதற்கான சட்டங் களை நிறைவேற்றவும் பாராளுமன்றம் ஒன்று அவசியமாகும்.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டு மாத்திரமே தற்போதைய பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவ தாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 5639 — L 5 3 9 4 9 0
அத சம்பத — L 9 4 9 0 — சீட்டிழுப்பு இலக்கம் 214

தன நிதானய — திகதி - 2024.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் - 1669 — T 01 07 22 48 T — Double Chance 082282

மெகா பவர் — திகதி 28/10/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1987 — C 17 08 20 66 70 — Double Chance 175625

லக்கி 7 VIP — திகதி 2024.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 0465 — T 3 5 0 8 9 6 T

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3881 — சீட்டிழுப்பு திகதி 28.10.2024 — R 09 14 49 62 — R 016027

HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.28 — சீட்டிழுப்பு இலக்கம் 948 — ரிஷபம் 13 21 35 48 ரிஷபம் — 074362 — 24

உத்தியோகபூர்வ முடிவுகள் — 28.10.2024 — வெற்றி வாரம் 347 — வர்ணம் ஊதா — L 1 2 1 6 5 2 — 29806 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,573,872.00 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2613 — வர்ணம் ஊதா — சீட்டிழுப்பு திகதி 28.10.2024 — தினம் திங்கள் — 04 22 73 76 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,514,421.60 — DLB

சனிதா — திகதி 2024.10.28 — வெற்றி வாரம் 4774 — 02 15 20 48 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,488,374.40 — ரூ.100,000/- 40118 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4325 — வர்ணம் மஞ்சள் — சீட்டிழுப்பு திகதி 2024.10.28 — தினம் திங்கட்கிழமை — 15 21 33 41 மகரம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,087,893.20 — 101208 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — L 27 02 08 36 46 — 1789 — பச்சை — 28.10.2024 திங்கள் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 553,005,788.20 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.10.28 — வெற்றி வாரம் 2072 — வர்ணம் செம்மஞ்சள் — 03 30 31 49 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,020,533.60 — DLB

அட கோடிபதி ADA KOTIPATHI — திங்கட்கிழமை — வெற்றி வாரம் 2439 — சீட்டிழுப்பு திகதி 2024.10.28 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.77,932,190.40 — 19 43 57 74 Y — 901950 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

# ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (493)

076 825 7716 (ஆகாஸ்)



## மொத்தக் கொள்வனவு

அங்கர் யோக்கட் மொத்தக் கொள்வனவுகள் விசேட விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
வடமராட்சி, தென்மராட்சி சில்லறை கடைகளுக்கு பலசரக்குப் பொருட்கள் விநியோகத்திற்கு எம்மை நாடுங்கள். (496)

ஹப்பி சூப்பர்மாக்கட்
உரும்பிராய்

48/= ~~80/=~~

077 773 0900



## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள PPT எனும் நிறுவனத்திற்கு வேலையாட்கள் தேவை.

- முகாமையாளர்
- காசாளர்
- அலுவலக உதவியாளர்
- பேருந்து நடத்துனர்

(2520)

077 386 6250, 077 573 1318



நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... இன்னும் சில நாட்களே உள்ளன

அமெரிக்க அதிஸ்ட விசா

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்

இந்த வருடம் A/L

0768226244

55000 இலவச விசாக்கள்

V2 Travels

0777469777, 0743900350, 0743900352, 0768226237, 0743900353, 0743900351, 0764550673, 0768226240, 0768226243, 0777068777, 0777720322, 0764550675, 0768226242, 0768226238, 0777726322, 0764550674, 0764550670, 0777718322, 0764550671, 0776699892, 0768226236, 0768226230, 0776697960



## வேலைவாய்ப்பு

சிங்களம், தமிழ் பேசக்கூடியவர்கள் உடனடியாகத் தேவை.

- விற்பனை பிரதிநிதி - ஆண்/பெண்
- விற்பனையாளர்கள் - ஆண்/பெண்
- அலுவலக உதவியாளர் - பெண்

தொடர்புகளுக்கு:
076 627 2742
076 075 5280

(2519)


# மரண அறிவித்தல்



தோற்றம் 22.12.1944 | மறைவு 27.10.2024

## திரு. தம்பு கணேசலிங்கம்

புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு கணேசலிங்கம் அவர்கள் கடந்த 27.10.2024 ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - இலட்சுமி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் காலஞ்சென்ற கந்தையா - சின்னம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்வஇரத்தினம் அவர்களின் சகோதரரும் பூலோகம் அவர்களின் அன்பு மைத்துனரும் முகுந்தன், பரிமளகாந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுபாஜினி, செல்வநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரவீன், சாருஜன், சஸ்மிதன், சம்வத்ஷன், மதுர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2024) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புன்னாலைக்கட்டுவன் தெற்கு விலங்கன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
புத்தூர் வீதி, புன்னாலைக்கட்டுவன் தெற்கு, சுன்னாகம். (497)
077 844 6099


# பாராளுமன்றத் தேர்தல் - 2024
## வன்னி மாவட்டம்



***அன்பான அரச பணியாளர்களே!***
வன்னிப் பெரு நிலப்பரப்பின் சிறந்த கல்விப் புலமையும் ஆற்றலும்மிக்க கலாநிதி நவரத்தினம் ரவீந்திரகுமாரன் அவர்களை உங்கள் பொன்னான வாக்குகளால் வெற்றி பெறச் செய்யுங்கள்.

### கலாநிதி நவரத்தினம் ரவீந்திரகுமாரன்

முன்னாள் பொருளியல் சிரேஸ்ட விரிவுரையாளர்
(கொழும்புப் பல்கலைக்கழகம்,
வவுனியாப் பல்கலைக்கழகம்)

(C-045)

வன்னி மண்ணின்
வளமான எதிர்காலத்திற்காக
உங்களுடன் நான்...

X 5

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி



# பாராளுமன்ற பொதுத் தேர்தல் - 2024
## (யாழ் - கிளிநொச்சி மாவட்டம்)

கடற்றொழில் மக்களுக்காக அயராது உழைக்கும் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியையும் அதன் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தா மற்றும் கட்சியின் ஊடக பேச்சாளர் ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் ஆகியோரை ஆதரித்து வெற்றிபெறச் செய்வோம்.

மத்தியில் கூட்டாட்சி!
மாநிலத்தில் சுயாட்சி!



உங்கள் முதன்மைத் தெரிவு
தோழர்
### டக்ளஸ் தேவானந்தா
(ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம்)

(C-044)

1

**ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)**
(கட்சியின் யாழ். மாவட்ட மேலதிக நிர்வாக செயலாளர்,
கட்சியின் ஊடகப் பேச்சாளர், பருத்தித்துறை
பிரதேச சபை முன்னாள் தவிசாளர்)

4

X

X 1 2 3 4 5 6 7 8 9

உடுத்துறை 10ம் வட்டார கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்



# உத்தியோகத்தர்களே உங்கள் பெறுமதியான வாக்கை தமிழ் அரசுக் கட்சிக்கு வழங்கிடுவீர்!

X

## இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி

(C-043)

தமிழ் அரசுக் கட்சி எங்கள் சொத்து அதனையே நாம் தெரிவு செய்வோம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.